403

17 JUL 1924

தொகுதி 3.] 1924௵ ஜூன்௴ 1௳ [பகுதி 5.

மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தியளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922வூ பிப்ரவரிமீ 1வ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவழத்தீவு" என்ற நாவல்கள் முடிவுபெற்று "ஞானசெல்வாம்பாள்" என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான இரண்டு நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமென்றி சஞ்சிகைகள் கிடையா. "ஞானசெல்வாம்பாள்" வேண்டியவர்கள சந்தாதாரராகச் சேர்ந்து சஞ்சிகை பெற்றுக்கொள்ளவேண்டும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்

படுத்திக்கொண்டு உண்ணாமுலை நிரபராதி என்பதைப் பற்றி வாதிக்கத் தொடங்கினார். அவர் நியாயாதிபதியையும் மற்றுமுள்ளோரையும் நோக்கி,

"நியாயாதிபதிகளே! ஜூரர்களாகிய கனவான்களே! இப்போது நான் இக்கன்னிகையின்மேல் சாட்டப்பட் டிருக்கிற குற்றத்தைப் பற்றி பேசுவதற்கு முன் இப்பெண்ணின் பூர்வ சரித்திரத்தைப்பற்றி சுருக்கமாகக் கூறவேண்டியது அவசியமாக விருக்கிறது. ஆகையால் இதை அனாவசிய மானதென்று தாங்கள் கருதாமல் தயவு செய்து இதைக் கவனம் வைத்துக் கேட்கும்படி யுங்களை வேண்டிக் கொள்கிறேன்" என்று தொடங்கி, உண்ணாமுலை பிறந்தது முதல் அவளுடைய இளவயதிலேயே அவள் தந்தையிறந்தது, அவள் பாட்டன் கடன்காரர் சிறைச்சாலையில் வைக்கப்பட்டது, அவள் தாயும் அவள் இளவயதிலேயே மடிந்தது, பிறகு அவள் தன் அத்தையின் ஆதரணையிலிருந்தது, சீக்கிரம் அம்மானும் மடிந்தது, அத்தையின் ஏகபுத்திரனும் மாலுமிவேலையி லமர்ந்து அவளைவிட்டுப் பிரிந்துபோக அவள் அனாதரவான நிலைமைக்கு வந்துவிட்டது முதலிய யாவற்றையும் சபையிலுள்ளோரில் பெரும்பாலர் கண்களிலிருந்து நீர்சொட்டுமாறு உருக்கமாகக் கூறியபின், பின்வருமாறு பேசினார்:—

"நீதவான்களே! ஜூரர்களே! இங்கிருந்து பரிதாபமான இக்கன்னிகையின் நடக்கை கவனிக்கத் தகுந்தது. இப்போது அவள் ஒரு ஆதரவுமில்லாதவளாகிவிட்டாள். தன் ஆகாரத்திற்கே தான் சம்பாதிக்க வேண்டியவளாய்விட்டாள். அந்தோ! இச்சிறுவயதில் அந்த ஒருகஷ்டம் மட்டு மல்லவே இவளுக்கு நேர்ந்தது. தன் வயோதிகப் பாட்டனார்-சிறைச் சாலையி லிருப்பவர்- அவருக்கு வேண்டிய உணவு ஆடைமுதலிய யாவும்கொடுத்து

அவரை யாதரிக்க வேண்டிய பொறுப்பும் இவள் மேலேயே வீழ்ந்தது. அது முதல்தான் இவள் சுந்தரம்மாள் வீட்டில் வசிக்கத் தொடங்கினள். உலக அனுபவமறியாது, திடீலென்று இத்தகைய அனுதாரவான நிலைமைக்கு வந்துவிட்ட இத்தகைய வாலிப கன்னிகை மனமுடைந்து ஏக்கங்கொண்டு எங்கேனும் ஓடிவிட்டாலும், பிராணத்தியாகஞ் செய்துகொண்டாலும், அல்லது ஆகாரத்திற்காக நெறிதவறி நடந்து கொண்டாலும் அவள் மேல் யாரேனும் குற்றங்கூற முடியுமோ? இல்லை.

ஆனல் நமது குற்றவாளி அத்தகைய காரியம் ஒன்றும் செய்யவில்லை. அவள் தன் தைரியத்தை விடவில்லை. கௌரவமான நெறியினின்றும் எள்ளளவுகூடப் பிரழவில்லை. ஊக்கத்தோடும் தைரியத்தோடும் தனக்குத் தெரிந்த தையல் வேலையில் இரவும் பகலும் தன் தேக சுகத்தைக்கூடக் கருதாமல் உழைக்கத்துணிந்தாள். கடந்த மூன்று வருடங்களாக அவ்வாறு தொழில்செய்து அதில் வரும் பொருளால் தன் வரையில் எல்லா சுகங்களையும் வெறுத்து பசிக்குமட்டும் சொல்ப ஆகாரம் உண்டு, வயோதிகரான தன் பாட்டனுருக்கு மட்டும் ஒரு சௌகரியமும் குறையாவண்ணம் கவனித்துக்கொண்டு வேலை தவிருது சரியான நல்ல ஆகாரமும் நாணயமான உடையும் அளித்து வந்தாள். இவ்வளவு சிக்கனமாகவும் யோக்கியமாகவும் நடந்துகொண் டிருக்கும் கன்னிகையும் இத்தகைய குற்றத்தைச் செய்வாளோ? கௌரவம் பொருந்திய சுந்தரம்மாள் இவள் நடவடிக்கைகளில் எள்ளளவும் மாசு மறுவில்லையென்று கூறி யிருக்கிறுள்.

நியாயாதிபதி யவர்களும் ஜூரர்களும் இன்னெரு விஷயம் கவனிக்கக் கோருகிறேன். "ஒருவர் இதுகாறும் யோக்கியராக விருப்பதனுலேயே குற்றம் செய்யவில்லை

யென்று கருதலாகாது'' என்று சாதாரணமாய் நினைக்கிறார்கள். இது தவறே. பிறந்தது முதல் யோக்கியமாயிருப்பவர்களும் நினைத்தபோது குற்றம் செய்வார்களென்று கருதுவதாயின் யோக்கியதைக்கு மதிப்பேயில்லை. இதை நன்றாய் யோசித்துப் பார்க்கவேண்டும். அப்போது ஒருவர் யோக்கியதையைப் பற்றி கவனிக்க வேண்டியதே யில்லை. இனி இவள் செய்ததாகக் கூறப்படும் குற்றத்தைப்பற்றிச் சிந்திப்போம்.

குற்றவாளி அக்கிழவியைச் சந்தித்து அவளோடு சச்சரவு செய்துகொண் டிருந்தாள். அச்சமயம் 'எனக்குப் புலிபோல் ஆத்திரம் வருகிறது' என்று கூறி யிருக்கிறாள். இதைக்கூறிய சாட்சியாகிய தேவராஜுப்பிள்ளை அவர்களுக்குள் சச்சரவு நேர்ந்தது என்ன காரணத்தால் என்று கூற முடியவில்லை. அக்காரணத்தையும் குற்றவாளிக்கும் கொலை யுண்டவளுக்கும் இருந்த சம்பந்தம் எத்தகையதென்பதைப்பற்றியும் ஒருவருமறியார்கள். ஆனால் அக்கிழவி குற்றவாளிக்கு அதிகமாகக் கோபமூட்டினாள் என்பது மட்டும் நன்றாய் விளங்குகிறது. அக்கோபத்தால் அவள் கிழவியைக் கொன்றுவிட் டிருந்தாலும் அவள் கொலைக் குற்றம் செய்தவளாகமாட்டாள். ஆனால் அவள் கொல்லவில்லை. தேவராஜுப்பிள்ளை அவர்கள் இருவரும் சண்டை யிட்டபோது பார்த்தார். பிறகு மறுபடி அவர் அந்த வீட்டிற்கு வருவதற்குள் பலர் அவ்வழி சென்றிருக்கலாம். குற்றவாளி கிழவியை விட்டுப்பிரிந்து போனபிறகு வேறொரு ஆள் அங்கு அக்கிழவியைச் சந்தித்திருக்கலாம். அந்த ஆள் கிழவியை யறிந்த விரோதியா யிருந்து அவளைக்கொன்றுவிட் டிருக்கலாகும். அப்படி நடக்கவில்லை யென்பதற்கு ருசுவில்லை.

இன்னொரு விஷயம். தான் கிழவியோடு சண்டை

யிட்டதை தேவராஜுப்பிள்ளை பார்த்தார் என்பது குற்ற வாளிக்கு நன்றாய்த் தெரியும். அவள் அறிவில்லாதவ ளல்ல. அப்படியிருக்க முன்னாடியே சண்டை யிட்டதற் குச் சாட்சி யேற்பட்டிருக்கும்போது, அதே யிடத்தில் அக்கிழவியைக்குற்றவாளி யெங்கேனும் கொல்வாளோ? இது சாதாரண புத்தியால் ஒப்பத்தகுந்ததோ?

கிழவியிடமிருந்த மோதிரம் குற்றவாளி யிடமிருந்த தென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதனாலேயே குற்றவாளி அவளைக்கொன்றாளென்று எப்படி நினைக்க லாம்? குற்றவாளி யதைப்போக்கடித்து விட்டிருந்து இன்னொருவர் அதைக் கண்டெடுத்து வைத்துக்கொண் டிருந்தால், அந்த ஆளே கொலை செய்ததாகவல்லவோ கருதவேண்டும். அம்மோதிரம் குற்றவாளி யுடையதாக வாவது, ஒருவர் கியாபகச்சின்னமாக அவள் வைத்துக் கொண்டிருந்ததாகவாவது இருந்து, இடையில் காணாது போய் இப்போது அக்கிழவியிடம் இருக்கக்கண்டு குற்ற வாளி அதை யளிக்கும்படி அவளோடு சச்சரவிட்டிருக்க லாகாதோ? "அதை யென்னிடம் கொடுத்துவிடு; இப்போது நான் ஒருவாரமாக வேலை செய்து அந்தக் கூலியை வாங்கி வருகிறேன். அதைக் கொடுத்து விடு கிறேன்" என்று கூறிச் சுகவிலாசத்தில் ஞானம்பாள் தனக்குக் கொடுத்த பணத்தை யெல்லாம் கொடுத்து விட்டு அந்த மோதிரத்தை வாங்கிக்கொண் டிருந்தால் அது குற்றமாகுமோ? அவள் இருக்கும் கஷ்ட நிலைமை யில் அந்தப்பணத்தை யிழந்தது அவளுக்குப் பெரிய மனோ வேதனையை யுண்டாக்கி யிருந்ததால் "இந்த மோதிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டாம்; அதற்காக நானடைந்த மனோவேதனை யுங்களுக்குத் தெரியாது" என்று கூறி யிருக்காலாதோ?

போலீஸார் அவள் அறைக்குள் நுழைந்தபோது அம்மோதிரம் மேஜைமேல் பகிரங்கமாகவே வைக்கப்பட்டிருந்தது. கொலை செய்து களவாடி வந்த பொருளை யெந்த மூடரேனும் அப்படி வைப்பார்களோ? அவர்கள் உள்ளே வந்தபோது அவள் அதை யெடுத்து மறைத்து விடச் சற்றும் முயலவில்லை. திடீலென்று இருவர் உள்ளே வரவே கலவரத்தோடு அவர்களை நோக்கினாள். அவர்கள் சாக்ஷி கூறிய விதத்தாலேயே கொலை நடந்த சங்கதியே அவர்கள் கூறிய பின்புதான் அவளுக்குத் தெரிந்ததென்று ஊகிக்கப் பூரணமாய் இடமிருக்கிறது.

மோதிரத்திற்காக அவள் கொலை செய்தவளாயின் கிழவியிடமிருந்த மற்ற பொருள்களை யெல்லாம் அப்படியே விட்டுவிட்டு வந்து விடுவாளோ? நியாயாதிபதிகளே! ஜூரர்களே! அவள் கிழவியோடு சச்சரவு செய்தாள், அவளிடமிருந்த மோதிரம் இவளிடமிருந்தது என்ற இந்த இரண்டு சந்தர்ப்பங்களே யன்றி குற்றவாளி கொலை செய்தாளென்பதற்கு வேறொரு நம்பிக்கையான சாட்சியமுமில்லை. நான் மேலே விவரித்தகாரணங்களால் அந்த இரண்டு சந்தர்ப்பங்களால் இவள் கொலை செய்தாளென்பதற்கு எள்ளளவு காரணமும் ஏற்படவில்லையென்று நன்றாய் விளங்குகிறது. இத்தகைய ஆதாரமற்ற ருசுவை நம்பி ஒரு வாலிபக்கன்னிகையை மரணதண்டனைக்குள்ளாக்குவது சற்றேனும் நீதியாகுமோ? இவ்வாறு நீதி செலுத்துவதாயின் எண்ணிறந்த நிரபராதிகள் அநீத மரணதண்டனைக்குள்ளாக்கப் படுவார்கள். நீதியே யடியோடு அநீதியாக மாறிவிடும். இப்போது அவசரப்பட்டு இவளைக் குற்றவாளியென்று மதித்துத் தண்டித்து விட்ட பிறகு, நாளைக்கே இக்கொலையைச் செய்தது வேறு ஆள் என்று கண்டுபிடிக்கப்பட்டால், இப்பிராணனைப் போக்

கடித்ததற்கு யார் ஈடுசொல்வது? இந்த விஷயத்தில் வேறொரு ஆளே இக்கொலையைச் செய்திருக்கலாம் என்று கருதப் பூரணமான காரணம் இருக்கிறது. ஏனெனில் குற்றவாளியே யிதைச்செய்தாள் என்பதற்கு நேரான சாட்சி யொன்றுகூட இல்லே. முழுமையும் உத்தேசமே. ஆகையால் ஜூரர்களாகிய கனவான்களே! கடவுளுக்குப் பயந்து இதைச் சிந்தித்து முடிவு கூறுங்கள். கடவுள் உங்களுக்கு நியாயவழி காட்டுவாராக'' என்று கூறிமுடித்தார்.

அதன் பிறகு நியாயாதிபதி பாரபட்சமின்றி கீழ்க் கண்டவாறு ஜூரர்களே நோக்கிக் கூறினர்:—

"ஜூரர்களே! இந்த விசாரணையில் ஒரு விஷயம் என் மனதிற்பட்டிருக்கிறது. அதாவது குற்றவாளி பட்சத்தில் எல்லா விஷயங்களும் வெளிக்கு வரவில்லே யென்றும், கொல்லப்பட்ட கிழவிக்கும் குற்றவாளிக்கும் நடந்த சச்சரவில் ஏதோ பெரிய மர்மம் வெளிவராமல் மறைக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது. குற்றவாளியின் லாயர் தன் தொழில் முறைமைப்படி குற்றவாளியின் பிரியத்தைக்கருதியோ வேறெந்த காரணத்தாலோ தாமும் அதை மர்மத்திலேயே விட்டுவிட்டிருக்கிருர். அது வெளிவந்தால் பூரண உண்மை வெளிப்பட்டுவிடும். குற்றவாளியின் லாயர் குற்றவாளி கோபமூட்டப்பட்டதால் ஒரு சமயம் கொலே செய்துவிட்டிருந்தாலும்...என்ருர். அதைப்பற்றி நீங்கள் சிந்திக்கவேண்டிய அவசியமில்லே. அப்படி நடந்திருப்பின் குற்றவாளியுடனே கூச்சலிட்டு தான் முதல் சந்தித்தமனிதரிடம் "அய்யோ நான் கோபத்தால் தற்செயலாய் ஒரு ஆளேக் கொன்றுவிட்டேன்'' என்று கூறி யிருந்தால் அதுவேறு விஷயம். இப்போது குற்றவாளியே கொலே செய்ததாக

விருந்தால் கொல்லவேண்டு மென்ற எண்ணத்தோடு செய்ததாகவே இருக்கவேண்டும். இன்னொரு விஷயம் நீங்கள் சிந்திக்கத்தக்கது. குற்றவாளி ஆத்திரத்தோடு "ஒரு புலியின் ஆத்திரம் இப்போது எனக்குண்டாகிறது" என்று கூறியிருக்கிருள். ஆயினும் தேவராஜப் பிள்ளை சென்றபின் அக்கோபம் தணிந்து விடப் போதுமான அவகாசம் இவளுக்கு இருந்திருக்கிறது. இதோடு இவள் அதை விட்டுச்சென்றபின் வேறு யாரேனும் அவ்வழி சென்று அக்கிழவியைக் கொன்றுவிட் டிருக்கலாம் என்று நினைக்கவும் வழி யுண்டு. இவற்ருேடு பாரிஸ்டர் வரதப்பிள்ளை யவர்கள் கூறிய அம்சங்களையும் நன்ருய்ச் சிந்தியுங்கள். யாவும் சிந்தித்துக் கொஞ்சம் சந்தேகம் தோன்றினும் அதன் பயனைக் குற்றவாளியே யடையச் செய்யுங்கள்'' என்ருர்.

உடனே ஜூரர்கள் அனைவரும் எழுந்து தங்கள் அறைக்குள் ஆலோசனை செய்யச்சென்ருர்கள். சபையிலுள்ள அனைவரும் நிர்ச்சந்தடியாய் ஆவலோடு அவர்கள் வரவை யெதிர்பார்த் திருந்தார்கள்.

சுமார் அரைமணி நேரங்கழித்து ஜூரர்களின் தலைவன் வெளியில் வந்தார். நியாயாதிபதி யவரை நோக்கி "நீங்கள் ஒரே மனதான அபிப்பிராயத்திற்கு வந்து விட்டீர்களா?" என்ருர்.

ஜூரர் தலைவன்:—நீதவானே! எங்களில் ஒருவர் மட்டும் ஒரு அபிப்பிராயமுடையவராகவும் மற்ற அனைவரும் வேறு அபிப்பிரயாயம் உடையோராகவும் இருக்கிருேம்'' என்ருர்.

நியாயாதிபதி:—"அப்படியாயின் இன்னும் கால் மணி யளிக்கிறேன். அந்த ஒருவரையும் உங்கள் அபிப்பிராயத்திற்குத் திருப்புங்கள்'' என்ருர்.

யாவரும் ஒருவன் திரும்புவது கஷ்டமல்ல. குற்ற வாளி பிராணதண்டனையே யடைவாள் என்று எண்ணித் துயரமுற்றார்கள். பின்னும் கால்மணி கழித்து ஜூரார் தலைவர் வெளியில் வந்தார். நியாயாதிபதி ஆவலோடு "என்ன? அபிப்பிராயம் முடிவிற்கு வந்ததா?" என்றார்.

தலைவர் "நியாயாதிபதியே. விவகாரம் முன்னிலும் தூரமாய்விட்டது. முன் ஒருவராயிருந்தவர் பின்னும் நால்வரைத் தமது அபிப்பிராயத்திற்குத் திருப்பிவிட்டார். இப்போது ஐவர் ஒரு அபிப்பிராயமும் எழுவர் ஒரு அபிப்பிராயமுமாக விருக்கிறோம்" என்றார்.

நியாயாதிபதி உங்களுக்குள் இருக்கும் வாதம் சட்டத்தில் எதையேனும் பற்றியா?" என்றார். தலைவர் இல்லையில்லை "நியாயத்தை யனுசரித்தே" என்றார். நியாயாதிபதி "அப்படியாயின் இன்னும் ஒருமணி நேரம் உங்களை யறைக்குள் அடைத்து வைத்து நான் வேறு வேலையைக் கவனிக்கிறேன். நியாயத்தைப்பற்றியாயின் வாதம் நடக்கவேண்டியதே." என்றார்.

அவ்வாறே ஜூரார்கள் அறையில் பூட்டப்பட்டார் கள். சரியாக ஒருமணிநேரங் கழிந்தது. இடையில் நியாயாதிபதி இன்னொரு குற்றச்சாட்டைப்பற்றி விசாரணை செய்துகொண் டிருந்தார். ஜனங்களில் ஒருவ ரேனும் வெளியிற் போய்விடவில்லை. அச்சமயம் அறை யின் கதவு திறக்கப்பட்டதும் ஜூரார்களனைவரும் வெளி யில் வந்தார்கள். நியாயாதிபதி ஜூராரின் தலைவரை நோக்கி என்னமுடிவு என்றார். தலைவர். "குற்றவாளி யல்ல" என்றார்.

38-வது அத்தியாயம்.

பெண்ணின் வஞ்சமும் குடும்ப விவரங்களும்.

நேயர்களே! இப்போது நாம் மறுபடி இந்திரபுரியைவிட்டு நெடுந்தூரத்திலிருக்கும் மேற்குத் தீவில் நடக்கும் சம்பவங்களைக் கவனிக்கவேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமாகவிருக்கிறது.

கிருஷ்ணராஜா அவனுக்ககப்பட்ட பொன் கட்டிகளாகிய ஆஸ்தியை யிழந்து இரண்டு நாட்களாயின. அடுத்த நாள் காலை பிநாகபாணிப்பிள்ளையின் புத்திரியாகிய இராஜசுந்தரி கையில் ஒரு தூக்குக் கூடையையெடுத்துக்கொண்டு தினம் வழக்கமாக வெளியிற் செல்லும் வேளைக்கு முன்பே செல்லத் தொடங்கினுள். அவள் தன் தந்தையின் தோட்டத்தில் புஷ்பங்களும் பழங்களும் இருக்கும் சிறு ஆற்றின் கரைக்குச் சென்று நல்ல மலர்களையும் பழங்களையும் பறித்துக் கூடையில் நிரப்பிக்கொண்டாள்.

அவள் முகத்தை நோக்கினுல் அவள் மனதில் ஏதோ விசனம் குடிகொண்டிருக்கிறதென்று நன்ருய் அறியலாம். அவள் ஆழ்ந்து சிந்திப்பதும் பெருமூச்சு விடுவதுமாக விருந்தாள். பரித்த புஷ்பங்களும் பழங்களுமுள்ள கூடையை ஆற்ரேரத்தில் வைத்துவிட்டு அதன் பக்கலில் உட்கார்ந்து ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள்.

அச்சமயம் பின்னுல் ஆள்வரும் சத்தங்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். வந்தது கிருஷ்ணராஜா என்று அறிந்ததே ஆவலோடெழுந்தாள். கிருஷ்ணராஜாவும் காலையில் எழுந்து உலவவந்து தற்செயலாய்

அவளைச் சந்தித்தான். அவள் அவனை நோக்கி "ஆ! நீர் கூட அதிகாலையில் எழுந்து வந்துவிட்டீர்" என்றாள்.

கிருஷ்ணராஜு.—நான் அப்படி வரவில்லை. எனக்கு இரவு முழுமையும் நித்திரையே பிடிக்கவில்லை. எப்போது பொழுது விடியுமோ வென்ற ஆவலே யதிகமாக விருந்தது. என் மனம் முறிந்து போய்விட்டது. ஆகையால் விடிந்ததும் வெளியில் வந்துவிட்டேன்.

இராஜசுந்தரி:—நீர் மிக்க வாட்டமடைந்திருக்கிறீர். என் மேல் உமக்கிருந்த அன்பே நீங்கிவிட்டதுபோ லிருக்கிறது.

கிருஷ்ணராஜு:—நீ பன்முறை யிவ்வாறு என்னிடம் கூறியிருக்கிறாய். இப்போது நானிருக்கும் நிலைமையில் எங்கேனும் நான் சந்தோஷமாக இருக்கலாகுமென்று நீ கருதுகிறாயா?

இராஜ:—அந்த ஆஸ்தி உமக்குக் கிடைக்காமலே யிருந்தால் நீர் இவ்வளவு வியாகூலமடைந்திருக்க மாட்டீரல்லவா?

கிருஷ்ண.—அப்போது இவ்வளவு பொருள் எனக்குக் கிடைக்கலாகுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் அவ்வளவு செல்வம் எப்படியோ கிடைத்தபின், நான் எவ்வளவோ சந்தோஷமும் நம்பிக்கையும் அடைந்திருக்கையில் அச்செல்வம் மாயமாப்ப் போய் விடுவதானால், பிறகு இவ்வுலகிலுள்ள எந்த சுகத்தைத் தான் உண்மையானதென்று நம்புவது? அந்தோ! நான் அருமையாகக் கருதிய என் சுற்றத்தார்க்கு எவ்வளவோ உதவி செய்ய எண்ணியிருந்தேனே. அது இப்போது பகற் கனவாகப் போய்விட்டதே.

இராஜ;—என் காதலரே! ஒருசமயம் அப்பொருள் மறுபடி யுமக்குக் கிடைக்கலாகும்.

கிருஷ்ண:—அது மறுபடி கிடைக்குமென்று எப்படி நினைப்பது? அதற்கு எள்ளளவு காரணமுமில்லை. நான் முதலில் அவசரத்தால் நீலன் என்ற அந்த நீக்ரோவே அதைக் களவாடினன் என்று கருதினேன். ஆனால் அவன் அதைக் களவாடவில்லையென்று மறுத்துவிட்டான். உண்மையில் சிந்தித்துப் பார்த்த போது அவன் களவாடினன் என்று கருத ஒரு காரணமுமில்லை.

இராஜசுந்தரி:—அந்த நீக்ரோக்களை யப்படி நம்பிவிடலாகாது. இவர்கள் பேச்சை நம்பலாகாது. என் பெரிய தந்தைகூட இவர்கள் குணங்களைப்பற்றி கூறினரல்லவா. அவன் அன்றிரவு தன் வீட்டிலிருந்ததாக ருசுவாகவில்லை யல்லவா?

கிருஷ்ணராஜ:—"எப்படி ருஜுவாகும்? அவன் தனியாகவே தன் வீட்டிலிருந்திருக்கிறான். அதோடு அவன் அன்றிரவு வீட்டைவிட்டு வெளிச் சென்றதாகவும் ருசுவாகவில்லை. அதைக் கவனி; அதைப் பற்றி சிந்திப்பதில் பயனில்லை. அது மறுபடி கிடைக்கப்போகிறதில்லை. அது அடியோடு போய்விட்டது. வீண் பேச்சேன்." என்றான்.

இராஜசுந்தரி மிக்க துயரத்தோடு "அந்தோ! தாங்கள் மிக்க வெறுப்போடு பேசுகிறீர்கள். என்மேல் இருந்த காதலை யடியோடு மறந்துவிட்டீர்கள். நான் மிக்க துரதிஷ்டமுடையவள். என் கெட்டகாலம் மிகக் கொடியது..." என்று கண்ணீர் விட்டுப் பிரலாபிக்கத் தொடங்கினாள்.

அந்தோ காதல் என்ற மாயவலையில் சிக்குண்டிருக்

கும் ஒரு வாலிபனை, தந்திரசாலியாகிய ஒரு பெண் நய வஞ்சகத்தால் மயக்கித் தன் விருப்பத்திற்கு இணங்கச் செய்வது ஒரு கஷ்டமான காரியமோ? அல்ல. இராஜ சுந்தரி கால்மணி நேரத்திற்குள் தந்திரமும் இரக்கமு மாகிய மொழிகளால் அவனை வசப்படுத்தி விட்டாள். அதனுல் அவன்,

"ஆ! நான் இச்செல்வத்தால் மயக்கப்பட்டு உனக் கும் உன் பெரிய தந்தைக்கும் மனவருத்த முண்டாகும் படி நடந்துகொண்டேன். இப்போது அம்மயக்கம் நீங்கிவிட்டது. அந்த ஆஸ்தி போய்விட்டவரையில் இனி நான் என் ஜன்ம தேசத்திற்குச் செல்வதில் பயனில்லை. பேசாமல் நிம்மதியாய் இங்கேயே யிருந்துவிட வேண்டி யதே'' என்ருன்.

இம்மொழிகளைக் கேட்டதே இராஜசுந்தரி மிக்க ஆனந்தமடைந்து "ஆ! இப்போதுதான் தாங்கள் பழைய மனோ நிலைமையை யடைந்தீர்கள்'' என்று அவனை யாலிங் கனம் செய்துகொண்டாள். இருவரும் இன்னும் சற்று நேரம் அங்குச் சம்பாஷித்துக்கொண் டிருந்துவிட்டு பிறகு வீட்டை நோக்கிச் சென்ருர்கள்.

அச்சமயம் பிணகபாணிப்பிள்ளை காலைப் போஜனம் அருந்துகிருர். கிருஷ்ணராஜு அவரிடம் பேசிய மாதிரி யால் அவர் சந்தோஷமடைந்து "ஆ! இச்செல்வம்போய் விட்டதற்காக உன் மனதிலுண்டாகியிருந்த கலக்கம் தணிந்து விட்டதென்று நம்புகிறேன்'' என்ருர். கிருஷ்ண ராஜு "ஆம், நான் அக்கலக்கத்தால் புத்தி தடுமாற்ற மடைந்து தங்களுக்கும் இராஜசுந்தரிக்கும் மனவருத்தம் வரும்படியாக நடந்துகொண்டேன். என்னை மன்னிக்க வேண்டும்'' என்றதே,

பிணகபாணிப்பிள்ளை "அதைப்பற்றி ஒன்றும்

கூறவே வேண்டாம். உன் மனம் மிக்க வேதனை யடைந்தது சுபாவமே. அதற்காக நீ வியாகூலப்பட வேண்டாம். இப்போது உன் அபிப்பிராயம் என்ன? ஊருக்குச் செல்ல விரும்புகிருயா? இங்கிருக்க விரும்புகிருயா?" என்ருர். கிருஷ்ணராஜு "இப்போது அப்பொருள் போய்விட்டதால் நான் என் சுற்றத்தாரிடம் செல்வதில் ஒரு பயனுமில்லை" என்ருன்.

பினுகபாணிப்பிள்ளை "வாலிபனே நீ இராஜசுந்தரியை விசுவாசிக்கிருய். நீ இங்கேயே யிருப்பதாயின் என் தோட்டத்தை மேல் பார்வை பார்த்துக்கொள்ளும் வேலையிலிருக்கலாம். இன்னெருவர் ஆதரணையிலிருக்கிருேம் என்று நீ எண்ணவேண்டியதில்லை. நீ உன் தாய் நாட்டிற்குச் சென்று உன் சுற்றத்தாரைப் பார்த்து வருவதாயின் அதற்கு வேண்டிய செலவிற்குப் போதுமான பணம் நான் அளிக்கிறேன்" என்ருர்.

கிருஷ்ணராஜு மிக்க நன்றியான மொழிகளால் அவருக்கு வந்தனமளித்தான். அவர் "போதும், ஒன்றும் கூறவேண்டாம். எனக்கு உன்மேல் பூரண அன்பிருக்கிறது. அவ்வளவே" என்று கூறிவிட்டு எழுந்து சென்ருர். அச்சமயம் அவரை நகரத்திலுள்ள அவருடைய பாங்கிக்கு ஏற்றிச்செல்ல வண்டி ஆயத்தமாக வீதியிற் காத்திருந்தது. அவர் உடனே யதிலேறிச் சென்ருர்.

மறுமிடம் இதுகாறும் வீட்டு வேலையைக்கவனித்துக் கொண்டிருந்த இராஜசுந்தரி அறைக்குள் வந்தாள். கிருஷ்ணராஜு அவள் பெரிய தந்தைக்கும் தனக்கும் நடந்த சம்பாஷணையை யவளிடம் கூறியதும் அவள் பூரண சந்தோஷமடைந்தாள்.

சுமார் பனிரண்டு மணிக்குமேல் இராஜசுந்தரி தையல் வேலையிலிருந்தாள். அச்சமயம் அவள் வெளி

யில் செல்வதில்லை. தனியாய்த் தன்னறையிலுட்கார்ந் திருந்த கிருஷ்ணராஜின் மனம் சஞ்சலமாகவேயிருந்தது. கிடைத்த பொக்கிஷம் போய் விட்டதைப்பற்றி அவன் தன் மனதைத் தேற்றிக்கொண்டதாய்க் கருதினனே யன்றி, உண்மையில் அவன் மனம் அதனுலுண்டான ஏக் கத்தை மறந்ததன்று. மனம் சஞ்சலமடையவே அவன் வீட்டினின்று புறப்பட்டு கடலோரத்தை நோக்கிச் சென்ருன். அங்கு சென்று ஒரு சிறு கல்லின்மேலுட் கார்ந்து கடலை நோக்கினன். உடனே தான் கப்பற்சேத மடைந்ததும், கிழவனுக்கு உதவி செய்ததும் அவன் இறந்ததும், பிறகு அவன் சவம் அகப்பட்டதும், பொன் அகப்பட்டதும், கணபதிப்பிள்ளை அவ்வூர் இராஜப்பிரதி நிதிக்குச் சிபாரிசுசெய்து அப்பொன்னைத் தனக்களிக்கும் படி செய்ததும், யாவும் ஒன்றின்பின் ஞென்ருகச் சிந் தனையில் வந்தன. கடைசியில் அப்பொன் இருந்திருந் தால் நமது பாட்டனருக்கும் உண்ணுமுலைக்கும் எவ் வளவோ சந்தோஷத்தை யுண்டாக்கியிருக்கலாமே, கட வுள் இப்படியும் நமக்கு ஏமாற்றம் காட்டலாமோவென்று நினைத்துப் பெருமூச்சு விட்டான். அச்சமயம் ஆளரவம் கேட்டுச் சட்டென்று திரும்பினன். கணபதிப்பிள்ளை தன் அருகில் வந்து நிற்பதைக்கண்டு ஆவலோடெழுந்து அவன் கரத்தைப்பற்றிக்கொண்டு வந்தன மளித்தான்.

கணபதிப்பிள்ளை:—வாலிபனே! உனக்கு நேர்ந்த நஷ்டத் தைப்பற்றி நான் கேள்விப்பட்டு மிக்க விசனமடைந் தேன். இன்று காலைதான் அச்சங்கதியைக் கேள் விப்பட்டேன். மூன்று நாட்களாகக் கொஞ்சம் அசௌக்கியத்தால் என் குடிசையைவிட்டு நான் வெளியில் வரவேயில்லை. என் வேலைக்காரனே செவிடன், அதோடு ஊமை. நான் அன்னிய மனி

தர் என்னிடம் வந்து பேசி அறிமுகமாகும்படி இடங்கொடுப்பதில்லை. ஒருவரையும் நெருங்க விடுவதில்லை.'' என்றான்.

கிருஷ்ணராஜு:—தாங்கள் மனித வர்க்கத்தைப்பற்றி மிக்க வெறுப்படைந்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது'' என்றான்.

கணபதிப்பிள்ளை:—ஆ! உலக இயல்பை யறிந்தவர்கள் யார் தான் வெறுப்படையா திருப்பார்கள். எனக்கு மனிதரிடம் நெருங்கிப் பேசவே பிரியமில்லை. ஆயினும் சிறுபிள்ளைகளின் பேச்சைமட்டும் சற்றுநேரம் நின்று கேட்பதுண்டு. ஏனெனில் அவர்கள் உள்ளத்தில் சூதுவாது முதலிய எவ்விதக் களங்கமும் இல்லை. நீ நல்ல உத்தமகுணமுடையவன் என்று எனக்குத் தோன்றியபடியால் உன்னிடம் பேசத் துணிந்தேன். இன்றேல் உன்னோடு பேசியேயிருக்க மாட்டேன்; உன் விஷயத்தில் தலையிட்டேயிரேன். உனக்கு அப்பொன் கிடைக்கும்படி உதவியும் செய்திரேன்'' என்றான்.

கிருஷ்ணராஜு:—நீர் செய்த பேருதவிக்காக நான் எவ்வளவோ நன்றி பாராட்டுகிறேன். அப்பொன் போய்விட்டது எனக்குப் பெருந்துயரே. ஏனெனில் என் ஜன்ம பூமியில் எனக்கு அன்பார்ந்த சுற்றத்தார்களுளர்...'' என்றதே கணபதிப்பிள்ளை ''ஆம் ஆம். உன் பாட்டனாரும் உன் அத்தை புத்திரியும்'' என்றான்.

இதைக்கேட்ட கிருஷ்ணராஜு வியப்படைந்து ''ஆ! அதெப்படி யுமக்குத் தெரியும்? நான் உம்மிடம் அதைப் பற்றி கூறவில்லையே'' என்றான். கணபதிப்பிள்ளை ''ஆ! நாம் சற்று அஜாக்கிரதையாகப் பேசிவிட்டோம்'' என்று

கருதி "இல்லையில்லை. அன்று என்னிடம் பேசியபோது அதைப்பற்றி கூறினே" என்ருன். உண்மையில் கிருஷ்ண ராஜு கூறவில்லை. அன்று காலை ஆற்ருேரத்தில் கிருஷ்ண ராஜும் இராஜசுந்தரியும் பேசிக்கொண் டிருந்தபோது தற்செயலாகக் கணபதிப்பிள்ளை அருகிலிருந்த செடிகளின் மறைவி லிருந்தபடியால், அப்போது நடந்த சம்பவங்கள் யாவும் கண்டான். அவர்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவன் செவியில் விழுந்தது. அச்சமயம் அதைக் கூறினுல் வாலிபன் ஏதேனும் தவருய் நினைப்பானென்று அதைக் கூறவில்லை.

கிருஷ்ணராஜு "இருக்கலாம். நான்ருன் கூறியிருப்பேன்" என்றதே கணபதிப்பிள்ளை "அப்படியாயின் அவர்கள் ஏழ்மையான நிலைமையிலிருக்கிருர்களோ?" என்ருன்.

வாலிபன்:—அந்தோ என் பாட்டனர் இருபத்தைந்து வருடங்களாகக் கடன்காரர் சிறைச்சாலையிலடைக்கப்பட்டிருக்கிருர். அவ்வளவு காலமாக அவருடைய வியாஜ்ஜியம் நடந்து வருகிறது." என்ருன்.

கணபதிப்பிள்ளை:—என்ன? இருபத்தைந்து வருடங்களாகவா? நல்ல நீதி! ஏன், நம்பிக்கையும் யோக்கியதையுமுடைய லாயர் உன் பாட்டனர் பட்சத்தில் அமர்த்தப்படவில்லையோ?

கிருஷ்ணராஜு:—"என் பாட்டனர் வியாஜ்ஜியத்தை வேலாயுதம்பிள்ளை என்ற ஒரு பிரசித்தி பெற்ற லாயர்தான் ஆதிமுதல் நடத்தி வந்தார். இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் அவர் தற்கொலை செய்துகொண்டு மடிந்தார். அந்தப்பற்றிய விபரம் எனக்கொன்றும் தெரியாது. ஆனுல் அவர் தற்கொலை புரிந்து கொண்டார் என்பதுமட்டும் நிச்சய

மானது. அவரிடமிருந்த தம்புசாமிப்பிள்ளையென்பவரே இப்போது லாயராகிய அவர் கட்சிக்காரருக்கெல்லாம் லாயராகவிருக்கிறார். அவர்தான் இப்போது என் பாட்டனார் வியாஜ்ஜியத்தை நடத்தி வருகிறார்'' என்றார்

இம்மொழிகளைக் கேட்டதே கணபதிப்பிள்ளையின் முகத்தில் ஒருவிதத் தீக்ஷணியமான பார்வையும் விகாரமுமுண்டாயின. ஆனால் அவன் சட்டென்று அவற்றை மறைத்துக்கொண்டு வாலிபனை நோக்கி "இதென்ன பெரிய அநியாயமாகவிருக்கிறதே! ஒரு மனிதனை இருபத்தைந்து வருடங்களாகக் கூட சிறையில் அடைத்து வைத்துக்கொண்டு அவன் வியாஜ்ஜியத்திற்கு முடிவு கூறாமல் வைத்துக்கொண் டிருப்பதுகூட நியாயமான சட்டதிட்டங்களாகுமோ. அடடா, அப்பொன் களவாடப்படாமலிருந்தால்...'' என்றதே, வாலிபன் "அய்யோ அது போக்கடிந்திராவிட்டால் நான் முன்னமே யதையெடுத்துக்கொண்டுபோய் என் சுற்றத்தாருக்கு எவ்வளவோ சௌகரியங்களை யுண்டாக்கியிருப்பேன், அத்தொகையால் என் பாட்டனாரை யடியோடு சிறையினின்றும் மீட்க முடியாவிடினும் எவ்வளவோ கஷ்டங்களை நீக்கக்கூடும். என் அத்தை புத்திரி இச்சமயம் என்ன கஷ்ட திசையில் இருக்கிறாளோ!'' என்று கண்ணீர் விட்டான்.

கணபதிப்பிள்ளை சற்றுநேரம் சிந்தித்துவிட்டுத் தட்டென்று "நீ இராஜசுந்தரியை மணம் புரியப் போகிறாயோ?'' என்றான். கிருஷ்ணராஜ— "நான் அக்கன்னிகையின்மேல் சத்தியமான காதல்கொண்டிருக்கிறேனென்றும் அவள் தந்தை நான் அவளை மணம்புரியச் சம்மதி யளித்தாரென்றும் முன்னமே தங்களிடம் கூறினேனல்லவா?'' என்றான்.

கணபதிப்பிள்ளை "ஆம் ஆம், நீ சுபதேசம் செல்கிருயல்லவா?'' என்ருன்.

வாலிபன்:—இப்போது நான் செல்வதில் ஒரு பயனுமில்லையே.

கணபதி:—ஆம் ஆம். அப்பொருள் போய்விட்டதால் உன் சுற்றத்தார்க்கு நன்மை செய்யவழியில்லை. ஆ! இப்போது பொன் போனதைப்பற்றி முதலில் நீக்ரோவான நீலன் மேல் உனக்குச் சந்தேகம் வீழ்ந்தது என்று கேள்விப்பட்டேன்.

கிருஷ்ணராஜு:—ஆம், அது உண்மையே. ஆனல் இப்போது அவன் மேல் சந்தேகங்கொள்ள ஒரு நியாயமுமில்லை. அப்படி நினைப்பது அநீதமாகும்.

கணபதிப்பிள்ளை:—ஆ! நீ நல்ல நியாயகுண முள்ளவன். அத்தகைய பெரிய நஷ்டம் நேரிட்டபோது தவருக ஒருவர் மேல் ஐயங்கொள்வது சுபாவமே.

கிருஷ்ணராஜு:—நான் மனதார ஒருபோதும் அப்படிக் கருதமாட்டேன்.

கணபதிப்பிள்ளை அவனை யுற்று நோக்கி ''ஆகையால் இப்போது உனக்கு ஒருவர் மேலும் சந்தேகமில்லையோ?'' என்ருன்.

வாலிபன்:—''இல்லை. அச்சங்கதி முழுமையும் பெரிய மர்மமாகவே யிருக்கிறது'' என்று நடந்த சங்கதி யாவும் விவரமாகக் கூறினன்.

கணபதிப்பிள்ளை:—"வாலிபனே இது உனக்குப் பெரிய நஷ்டமே. இதைப்பற்றி நான் மிக்க விசனமடைகிறேன்'' என்று கூறி அந்தவிடத்தைவிட் டெழுந்து சென்ருன்.

கிருஷ்ணராஜு அவன் கண்ணுக்கு மறையுமட்டும் பார்த்துக்கொண்டே யிருந்து விட்டு கடைசியில் " ஆ!

இவன் ஒரு அபூர்வமான மனிதனே. ஆனால் மிக்க நல்லவன்'' என்று கூறிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டு வீட்டை நோக்கிச் சென்றான்.

அவன் தோட்டத்தில் நுழைந்து ஆற்றோரமே சென்றுகொண் டிருந்தான். அப்போது தற்செயலாய்க் காலையில் தானும் இராஜசுந்தரியும் சந்தித்த விடத்தினருகிற் சென்றான். அச்சமயம் யாரோ அலறிக்கூவும் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டான். ஏனெனில் அது இராஜசுந்தரியின் குரல்போல் இருந்தது. சத்தம் வந்ததிக்கை நோக்கினான். சற்று தூரத்தில் இராஜசுந்தரி நீக்ரோவாகிய நீலன் கரத்தில் சிக்கிக்கொண்டு விடுவித்துக் கொள்ள முடியாமல் அலறுவதைக் கண்டதும் அங்கு கீழே யிருந்த ஒரு கழியை யெடுத்துக்கொண்டு ஒரு பாய்ச்சலாய் பாய்ந்துபோய் அக்கழியால் நீலன் மண்டைமேலோரடி யடித்தான்.

நீக்ரோ உடனே இராஜசுந்தரியை விட்டு அப்புறம் போய் வீழ்ந்தான். இராஜசுந்தரி அலறிக்கொண்டே சந்தோஷத்தோடு ஓடிவந்து கிருஷ்ணராஜைப் பற்றிக் கொண்டாள். நீக்ரோ மெதுவாகச் சமாளித்துக்கொண் டெழுந்துநின்று தீட்சணியமான பார்வையாய்க் கிருஷ்ணராஜை நோக்கினான். கிருஷ்ணராஜ ! "அடே துஷ்டனே ! போ அப்புறம்'' என்றதும், ஒரு விதச் சந்தேகமடைந்து பாய்ந்து சென்று அவன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு "அடே ! நிரபராதியாகிய ஒரு கன்னிகைக்கு இத்தகைய அக்கிரமம் செய்யத்துணிந்த நீ என் பொன்னைக் களவாடிக்கொண் டிருப்பாய் என்றே நான் நம்புகிறேன். அட கள்ளப்பயலே ! எங்கே அதை வைத்திருக்கிறாய்? கூறு சீக்கிரம்''என்று கோபாவேசத்தோடு கேட்டான்.

நீலன் திகிலடைந்து "அய்யோ! நான் உன் பொன்ணைப் பார்க்கவேயில்லை. எல்லாருக்கும் பொதுவான ஒரு கடவுளிருக்கிறார். அவரறியக் கூறுகிறேன். நான் அதைப் பார்க்கவேயில்லை" என்றான். கிருஷ்ணராஜு யோசித்தான். காமவிகாரத்தால் கண்மூடித்தனமாக இக்குற்றத்தைச் செய்ததாலேயே, இவன் களவாடினனென்று நாம் நினைப்பது எப்படி என்று கருதி, "அடே துஷ்டனே! போ ஒழிந்து போ!" என்று தள்ளினன்.

நீலன் அங்கிருந்து அருகிலிருந்த மரங்களுக்கிடையில் நுழைந்து மிருகத்தைப் போல் பயங்கரமாக உருமிக்கொண்டு சென்றான். அவன் போட்ட கூச்சல் கிருஷ்ணராஜைத் திடுக்கிடச் செய்தது. அவன் உடனே இராஜசுந்தரி யருகிற்சென்று அவள் அடைந்திருந்த திகில் நீங்கும்படி தேறுதல் கூறியபின் இருவரும் சற்று நேரம் அங்கேயே சந்தோஷமாகச் சம்பாஷித்துக்கொண்டிருந்து கடைசியில் வீட்டை நோக்கிச் சென்றார்கள்.

இவர்கள் வீடுபோய்ச் சேர்ந்த சற்று நேரத்திற்குள் பிணுகபாணிப்பிள்ளை நகரத்திலிருந்து வந்தார். அவர் வழக்கப்படி அன்று நடந்த சங்கதிகளை யெல்லாம் அவர்களிடம் கூறியபின், யாவரும் வழக்கம்போல் போஜனத்திற் குட்கார்ந்தார்கள். முதலில் கிருஷ்ணராஜு நீலனுடைய அக்கிரமச்செயலைப்பற்றி அவனுடைய எஜமானுக்குத்தெரிவித்து அவனுக்குத் தக்க தண்டனை விதிக்கச் செய்யவேண்டுமென்று கருதினன். ஆனல் பிறகு சாந்தமடைந்து பிணுகபாணிப்பிள்ளையிடம் கூட அதைப்பற்றி கூறவில்லை. இராப்போஜனம் முடிந்தபின் மூவரும் சாதாரணமான விஷயங்களைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டிருந்துவிட்டு சயனத்திற்குச் சென்றார்கள்.

39-வது அத்தியாயம்.

மிக்க ஆச்சரிய சம்பவம் - களவு வெளியாயிற்று.

மறுநாள் நடுப்பகலில் இராஜசுந்தரி வீட்டிலிருக்கும் சமயத்தில் கிருஷ்ணராஜூ தன் அறையில் உட்கார்ந்துகொண்டு சிந்தனையிலிருந்தவன் எழுந்து கடலோரம் சென்றான். அவன் கடலோரம் திரும்பும் பாதையிற் பிரவேசித்தபோது கணபதிப்பிள்ளை யெதிரில் வருவதைக் கண்டு நின்றான். கணபதிப்பிள்ளை அவனருகில் வந்ததும்,

"வாலிபனே! உனக்கு அவகாசமிருந்தால் தயவு செய்து என் குடிசைக்கு வரவிரும்புகிறேன். உன்னிடம் விசேடப் பேச்சிருக்கிறது" என்றான். இம்மொழிகளைக் கேட்ட வாலிபன் மிக்க வியப்படைந்து "ஆ! என்னிடமா? விசேடப்பேச்சா?" என்று பிரமித்தான்.

கணபதிப்பிள்ளை:—"நான் உன்னிடம் பேசவேண்டுமென்று கூறியது உனக்கு மிக்க வியப்பாகவேதானிருக்கும். ஏனெனில் நான் இங்கு ஒருவரிடமும் பேசுகிறதில்லை யென்று யாவருமறிவார்கள். ஆயினும் எதற்கும் விலக்குண்டு. எப்படிப்பட்ட மௌனியும் ஒருவரிடம்பேச நேரிடும்" என்றான்.

உடனே இருவரும் கணபதிப்பிள்ளையின் குடிசைக்குச் சென்றார்கள். அங்குசென்று உட்கார்ந்ததும், கணபதிப்பிள்ளை கிருஷ்ணராஜை நோக்கி "உன் பொன் பெட்டியை யார் களவாடியதென்று அறிந்துகொள்ள விரும்புகிறாயா?" என்றான்.

இதைக்கேட்டதே வாலிபனுக்குண்டான சந்தோஷத்திற்கும் ஆச்சரியத்திற்கும் ஓர் அளவேயில்லை. சற்று நேரம் அவனுக்குப் பேசவேகூடவில்லை. அதற்குள் கணபதிப்பிள்ளை 'இரு இரு முன்னே அப்பெட்டியைப்

பார்'' என்று எழுந்தான். வாலிபனுக்கு இது மெய்யோ கனவோ என்று கலக்கமுண்டாயிற்று.

கணபதிப்பிள்ளை தன் வீட்டிலிருந்த ஒரு அலமாரி யைத்திறந்து அதிலிருந்த பெட்டியை யெடுத்து மேஜை மேல் வைத்து இதோ பார் உன் பொன் பெட்டி. அதி லிருந்த பொன் அப்படியே கொஞ்சமும் குறையாதிருக் கிறது. நீ பழையபடி செல்வவந்தனுகி விட்டாய். இனி சற்றும் ஆலசியம் செய்யாமல் இதை யெடுத்துக்கொண்டு உன் ஜன்மதேசம் போய்ச்சேர். இனி யுனக்கிங்கு ஒரு வேலையுமில்லை. நீ புத்திசாலியாயின் மறுபடி இங்கு எட்டியே பார்க்கமாட்டாய்'' என்ருன்.

கிருஷ்ணராஜனுக்குண்டான சந்தோஷம் அவனை மெய்மறக்கச்செய்தது இதோடு வியப்பு ஒரு பக்கம். கணபதிப்பிள்ளையின் கையில் இது எப்படி வந்தது? அவனே இதைத் திருடினுன் என்று நினைக்கவிடமில்லை. இந்த வியப்பாலும் சந்தோஷத்தாலும் கணபதிப்பிள்ளை தனக்குக் கூறியகடைசி விஷயம் இன்னதென்பதை யவன் கவனிக்காமல், "அய்யா தங்களுடைய நல்ல குணமும் அன்பும் மிக்க புகழ்ச்சிக்குரியன. தாங்களே சிநேகன் என்ற பெயருக்குத் தகுதி யுடையவர். மிக்க அபூர்வமான மனிதர். ஆ! களவாடியது யார் என்பதைக்கூற மறந்து விட்டீரே. ஆயினும் நீ யதை யறிய விரும்புகிருயா? என்று கேட்டீரே!'' என்ருன்.

கணபதிப்பிள்ளை:—"இன்னும் அதை யறிய விரும்பு கிருயா?'' என்ருன்.

வாலிபன்:—"ஆம் ஆம் கூறும்'' என்ருன்.

கணபதிப்பிள்ளை:—"அப்படியாயின் கூறுகிறேன். அப் பொருளுக் - காசைவைத்து அது களவாடப்பட வில்லை. வேறு ஒரு ஆழ்ந்த கருத்தைக்கொண்டு

அது எடுத்துக்கொள்ளப் பட்டது. எதற்காக வெனில், உன்னை யுன் ஜன்மதேசம் செல்லவொட்டா மல் தடுத்துவிடக் கருதியே அப்பெட்டி யெடுக்கப் பட்டது. அதை யெடுத்தது இராஜசுந்தரியே'' என் ருன்.

இதைக்கேட்டதே கிருஷ்ணராஜு பேரிடி விழுந் தவன் போலானுன். அவன் மனதில் பெரிய நரகவேதனை யுண்டாய்விட்டது. அவன் "ஆத்திரத்தோடு இராஜசுந் தரியா அதை யெடுத்தாள்! இராது இராது; வேறெதைக் கூறினும் நம்புவேன். அவள் எடுத்தாள் என்று கூற வேண்டாம். நான் நம்பமாட்டேன்'' என்ருன்.

கணபதிப்பிள்ளை:—"அய்யோ பரிதாபமான வாலிபனே! நீ கடைசியில் இதை நம்பியே தீரவேண்டும். உனக்கு இன்னும் உலக அனுபவம் தெரியாது. வெளித்தோற்றத்தைக் கண்டு உனக்குள் உண்டான அபிப்பிராயத்தையே நம்பிக்கொண்டாய். அத ஞல் முதலிலேயே யுனக்குச் சரியான விடத்தில் சந் தேகமுண்டாகவில்லை.'' என்ருன்.

கிருஷ்ணராஜு:—"சே! இனி இவ்வுலகில் யாரைத் தான்! எதைத்தான் நம்புவது''என்று ஆத்திரத்தோ டெழுந்து பொன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கடலைநோக்கி யோடத்திரும்பினுன்.

கணபதிப்பிள்ளை அவன் தோளைப்பற்றிக்கொண்டு "ஆ ஆத்திரக்கார வாலிபனே! என்ன முட்டாள்தன மான காரியம் செய்யக்கருதினை. உலகில் இத்தகைய துன்பங்களைக்காணுமலே உன் வாழ்நாட்களைக் கழிக்கலா மென்று கருதுகிருய். இதைவிட இன்னும் கஷ்டமான துன்பங்கள் நேரவேண்டாமென்று கடவுளைப் பிரார்த் தனை செய்'' என்ருன்.

கிருஷ்ணராஜ—:—இதனினும் கொடிய ஆபத்து கூட உளதோ! ஆயினும் தங்களுக்கு இவ்விஷயம் எப்படி தெரிந்தது ?'' என்றான்.

கணபதிப்பிள்ளை:—"எனக்கு முதலில் சந்தேகம் தோன்றியது. பிறகு அது நிச்சயமென விளங்கிவிட்டது. நீ சற்று பொறுமையோடு கேட்பதாயின் யாவும் விவரமாகக் கூறுகிறேன். இப்போது நான் உன்னிடம் இவ்வளவு பேசுவது உன் நன்மையைக் கருதியே'' என்றான்.

கிருஷ்ணராஜ—:—"அவ்வாறே பொறுமையோடு பேசாமல் கேட்கிறேன்; கூறும்'' என்றான்.

கணபதிப்பிள்ளை:—"இப்போது நான் மனம்விட்டு யாவும் கூறுகிறேன். ஆனால் நீ என்னைப்பற்றி தவறான எண்ணங்கொள்ளலாகாது. நேற்று காலை நீயும் இராஜசுந்தரியும் ஆற்றோரத்தில் சம்பாஷித்தபோது நான் யாவும் அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். உங்கள் சம்பாஷணையைக் கேட்கவேண்டுமென்று நான் அங்கு வந்தவனல்ல. நான் தற்செயலாக அங்கு வந்தேன். உன் பொன்பெட்டி போக்கடிந்து போனதைப்பற்றி அப்போது தான் நான் முதல் முதல் கேள்விப்பட்டேன். ஏனெனில் நான் கடந்த மூன்று தினங்களாக என் வீட்டைவிட்டு வெளிப்படவில்லை யென்பது உண்மை. நேற்று உன் முகத்தைக் கண்டபோது உன் முகம் மிக்க வாட்டமடைந்து ஒருவித விகாரமுற்றிருந்தது. உன் மேல் எனக்குண்டாயிருந்த நல்லபிப்பிராயத்தால் நீ யவ்வாறு வாட்டமடைந்திருப்பதைக் கண்டதே எனக்கு வியாகூலமுண்டாயிற்று. அதனால் உன் சங்கதியைப் பற்றி யறியவேண்டுமென்றே யங்கு நின்றேன்.

நான் வேறெவ்விதக்கெட்ட எண்ணங்கொண்டாவது உங்கள் சம்பாஷணையை யுற்றுக்கேட்கவேண்டு மென்றாவது அப்படி நிற்கவில்லை யென்று இப் போது அறிந்து கொள்வாயென நம்புகிறேன்...'' என்றதே,

வாலிபன்:—''நண்பரே! தங்களை யத்தகைய துர்நடக்கை யுடையோரென்று எவருமே கருதமாட்டார்கள். அப்புறம் நடந்த சங்கதியைக்கூறுங்கள்'' என்றான்.

கணபதிப்பிள்ளை:—பிறகு நீங்கள் பேசியபோதுதான் உனக்கு அந்த நஷ்டம் நேரிட்ட விஷயம் எனக்குத் தெரிந்தது. அப்போதே அப்பெட்டியை எடுத்தது இராஜசுந்தரிதான் என்று என் மனதிற்றேன்றியது. நேற்று மாலை அதைப்பற்றி யுன்னிடம் கூறவேண்டு மென்றே நான் உன்னைச் சந்தித்தேன். ஆனால் உன் னிடம் பேசிய போது கடைசியில் இது சந்தேகம் தானே என்று கருதி உன்னிடம் கூறவில்லை. இதைப் பற்றி இன்னும் ஆராய்ச்சி செய்வோம் என்று எனக்குள் தீர்மானித்துக்கொண்டு உன்னை விட்டுப் பிரிந்தேன். ஆனால் அச்சமயம் எவ்விதமாக இதைக் கண்டறிவதென்று எனக்குள் ஒரு வழியும் ஏற்பட வில்லை.

உன்னை விட்டுப்பிரிந்த பின் கொஞ்சநேரங்கழித்து நீக்ரோவாகிய நீலனைச் சந்தித்தேன். அவன் அச்சமயம் ஏதோ ஆவேசம் பிடித்தவன் போல் அதிவேகமாய் மிக்க கலவரத்தோடு வந்துகொண் டிருந்தான். இந்த நீக்ரோக்கள் என்னிடம் ஒருவிதப்பீதிகொண் டிருக்கிறார் கள். ஆனால் பீதியோடு அவர்களுக்கு என்னிடம் மரி யாதையும் உண்டு. நான் நீலனைக்கண்டதும் அதிகாரத் தோடு நில் என்று கூறினேன். அவன் நின்றான். அதன்

பிறகு நல்ல வார்த்தைகளால் அவன் மனக்கலக்கத்திற்குக் காரணம் என்னவென்று கேட்டேன். அவன் முதலில் கூற அஞ்சினன். நான் பின்னும் நல்லதனமாகக் கேட்ட போது கொஞ்சங் கொஞ்சமாகக் கூறத்தொடங்கினன். அவன் கூறியவற்றால் இராஜசுந்தரியைப் பற்றிய சங்கதி யிதில் சம்பந்தப்பட்டிருக்கிறதென்று எனக்குத் தோன்றி யது. அதன்மேல் அவனை யின்னும் நல்லதனமாகக்கேட் டேன். அன்போடு பேசினேன். கடைசியில் அவன் மனதிலிருந்த யாவும் பிடுங்கிவிட்டேன். கடந்த வெள்ளிக் கிழமை இரவுதானே இப்பெட்டி களவு போனது?" என்றான்.

கிருஷ்ணராஜு :—"ஆம் ஆம். மறுநாள் காலைதான் அது காணமற் போனதை நான் அறிந்து கொண் டேன்.

கணபதிப் பிள்ளை :—அன்றிரவு இராஜசுந்தரி நீ படுத்திருக் கும் அறையின் சாளரத்தில் நின்றுகொண் டிருந் ததை நீலன் கண்டான்.

கிருஷ்ணராஜு:—ஆ! அப்படியாயின் அவள் எடுத்தாள் என்பது உண்மையாயினும் அந்த நீக்ரோவின் வார்த்தையை எப்படி நம்புவது?

கணபதிப் பிள்ளை:—பூரணமாக நம்பக்காரணமிருக்கிறது. மற்ற சந்தர்ப்பங்களால் எல்லாம் அவன் கூறுவது உண்மையென விளங்குகிறது. கொஞ்ச நாட்களா கத் தான் இராஜசுந்தரியின் அழகினல் மயக்கப் பட்டு எப்படியேனும், தன் காதலைத் திருப்தி செய்துகொள்ள வேண்டுமென்று சமயம் பார்த்துக் கொண் டிருந்ததாக என்னிடம் ஒப்புக்கொண்டான். உனது பொற்பெட்டி களவு போன இரவிற்கு முன் மாலைப்போது அவனுடைய எஜமான் அவனிடம்

ஒரு கடிதம் கொடுத்துப் பினாகபாணிப்பிள்ளையிட மளிக்கும்படி கூறினான். நீலன் அக்கடிதத்தை யெடுத்துக்கொண்டு உங்கள் வீட்டுத்தோட்டத் திற்குள் வந்துகொண் டிருந்தபோது நீயும் அக்கன் னிகையும் சம்பாஷித்துக்கொண் டிருந்ததைக் கண் டான்.

கிருஷ்ணராஜா:—ஆம் ஆம். வந்திருந்தான் உண் மையே.

கணபதி:—ஆனால் அப்போது அவன் நீங்கள் பொன் னைப் பற்றிப் பேசியதைக் கேட்கவில்லை. அவன் அப்போது இராஜசுந்தரியைக் கண்டதே அவன் மனதில் காதல் தீ மூண்டுகொண்டது. கடிதத் தைக் கொடுத்துவிட்டு அவன் வீட்டிற்குத் திரும் பியதும் வழக்கம்போல் அன்று தன் ஜாதியார் கூட் டத்தில் சேர்ந்து களிக்கச்செல்லவில்லை. தனியே தன் வீட்டிலே யிருந்து விட்டான். ஆனால் இரவு அவனுக்கு நித்திரை பிடிக்கவில்லை. காதலாலுண் டான வேதனையைச் சகிக்க அவனால் முடியவில்லை. ஆகையால் எப்படியானாலும் சரி தன் காதலை யெவ் விதத்திலேனும் தணித்துக்கொள்ள முயல்வதே சரி, அதனால் மறுநிமிடமே உயிர்துறக்கவேண்டி யிருப் பினும் அவசியமில்லை என்று துணிகரங்கொண்டு அந்த நள்ளிரவில் வீட்டைவிட்டுப் புறப்பட்டான்.. அப்போது இரவு பதினொருமணிக்குமே லிருக்கும் அவன் வெளிச்சென்றதை யொருவரும் பார்க்க வில்லை.

கிருஷ்ண:—ஆம் ஆம். களவைப்பற்றி மறுநாள் விசா ரணை நடந்தபோது அவ்வாறே ருசுவாயிற்று.

கணபதி:—ஆயினும் உண்மையில் அவன் வெளிச்

18650

சென்றே யிருக்கிறான். வீட்டிலிருந்து புறப்பட்டதே நேராய் பிறைகபாணிப்பிள்ளை வீட்டின் தோட்டத்திற்குள் பிரவேசித்தான். அச்சமயம் நிலவு கொஞ்சம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. தோட்டத்தில் நுழைந்து வீட்டின் ஓரத்தில் போய் எட்ட நின்று எவ்வாறு இராஜசுந்தரியின் படுக்கை யறைக்குள் பிரவேசிப்பதென்று பார்த்துக்கொண் டிருந்தான். அப்போது மேலே எங்கோ சாளரக்கதவு மெதுவாகத் திறக்கப் படுவதைக்கேட்டு நிமிர்ந்து பார்த்தான். உன் படுக்கையறை யின்னதென்று அவனுக்குத் தெரியும். அந்த அறையின் சாளரமே திறக்கப் பட்டதென்று கண்டான். அச்சாளரத்தில் ஒரு உருவம் நின்றிருந்தது. உற்று நோக்கினான். இராஜசுந்தரியே அங்கு நிற்கிறவள் என்று அறிந்தான். உடனே அவள் முன்னமே இரகசியமாக உன் மனைவியாகி விட்டாளென்று அவன் மனதிற்பட்டது. அந்த எண்ணம் அவன் மனதைச் சுட்டெரிக்க அவன் உடனே வீட்டிற்குத் திரும்பி விட்டான். அவன் திரும்பிவந்ததையும் ஒருவரும் காணவில்லை.

மறுநாட் காலைத் திடீலென்று அவன் பிடிக்கப்பட்டு விசாரணை நடந்தபோது அவன் தான் இரவு கண்ட சங்கதிகளைக் கூறி விடவே முதலில் கருதினான். ஆனால் உன் சாளரத்தில் இராஜ சுந்தரியைக் கண்டதாகக் கூறினால் தான் அங்கு அந்நேரத்தில் வந்த காரணத்தைக் கூற வேண்டும். அத்தகைய அக்கிரமத்தைச் செய்யத் துணிந்தவன் களவாடியும் இருப்பான் என்று எண்ணிக் கொள்வார்களென வஞ்சினான். மேலும் தான் இரவு வீட்டைவிட்டு வெளிச்சென்றது யாருக்கும் தெரியாது.

தான் கூறுதிருந்தால் அச்சங்கதி வெளிவராது. ஆகையால் அதைக் கூறலாகாதென்று பேசாம லிருந்துவிட்டான்.

கிருஷ்ணராஜூ:—அப்படியாயின் பெட்டியைக் களவாடியது இராஜசுந்தரியென்று அவனுக்குத் தெரியும். சந்தேகித்தாவது இருப்பான்.

கணபதி:—இல்லையில்லை. இந்த நீக்ரோ ஜாதியார் புத்தி சூக்குமமானவர்களல்ல. அவள் உன் அறையிலிருந்ததால் தான் களவாட முடியாது என்பதை உணர்த்தவே அதைக் கூறவெண்ணினனன்றி வேறில்லை.

கிருஷ்ண:—சரி, இனி இது எப்படி யும்மிடம் சிக்கியதென்பதைக் கூறும்.

கணபதி:—முதலில் இராஜசுந்தரியே யதை யெடுத்திருக்க வேண்டுமென்று சந்தேகம் உதித்தது. நேற்று நடந்த இன்னொரு சம்பவத்தைக் கூறுகிறேன். நீலன் ஒன்றையும் ஒளிக்காமல் யாவும் என்னிடம் கூறிவிட்டான். நேற்று நீ என்னிடம் கடலோரத்தில் பேசிவிட்டுச் சென்றாயல்லவா? அச்சமயம் நீலன் தற்செயலாக ஆற்றோரத்தில் இராஜ சுந்தரியைக் கண்டு தன் ஆவலை யடக்க முடியாது அவளைப் பிடித்தான். நீ யச்சமயம் அங்கு சென்றவன், அதைக்கண்டு அவனை யடித்து வீழ்த்தி இராஜசுந்தரியைக் காப்பாற்றினாய். அங்கிருந்து அவன் ஒருவித ஆத்திரத்தோடும் விகாரமடைந்த முகத்தோடும் அதிவேகமாக வந்துகொண்டிருக்கையில்தான் நான் அவனைக்கண்டு நிறுத்தி ஆறுதல் கூறி சங்கதியென்னவென்று கேட்டேன். அப்போது அவன் கூறிய இரண்டொரு வாத்தைகளால் அவன் மனதி

ுள்ளது இராஜசுந்தரியைப்பற்றிய சமாசாரம் என்று தெரிந்ததே தந்திரமாகக் கொஞ்சம் கொஞ்சமாய் எல்லாச் சங்கதிகளையும் கிரகித்துக்கொண்டேன். அப்போதுதான் நான் கொண்ட சந்தேகம் நிச்சயம் என்று எனக்குத் தெரிந்தது. அதுவரையில் இதன் உண்மையை யறிய என்ன செய்வதென்பது எனக்கு விளங்கவில்லை.

அதன்மேல் சிந்திக்கலானேன்; அவள் அப்பெட்டியை யபகரிக்கவெண்ணி எடுக்கவில்லை, உன்னை ஊருக்குச் செல்லாமல் தடுக்கவே யப்படிச் செய்தாள். உன்னை மணம்புரிந்து கொள்ளப்போகிறாள். மணம் முடிந்து நீ பலரறியக் கணவனாகிவிட்டால் அதன் பிறகு நீ விட்டு விட்டுப் போய்விடுவாய் என்ற பயமில்லை. ஆகையால் அதன் பிறகு இப் பொக்கிஷத்தை யளிப்பாள். அப்போதும் அது தற்செயலாக அகப்பட்டதாகத் தான் கூறுவாள்.

அப்படியானால் இப்போது அதை யெங்கு வைத்திருப்பாள் என்று சிந்தித்தேன். வீட்டில் யார் கையிலாவது சிக்கிக்கொள்ளும்படியான விடத்தில் வைக்கமாட்டாள். பெரும்பாலும் புதைத்தே வைத்திருக்கவேண்டும். எங்கு கொண்டுபோய்ப் புதைத்திருப்பாள்? அது பளுவான பெட்டி யாதலின் நெடுந்தூரம் அவள் சுமந்துசெல்ல முடியாது. ஆகையால் வீட்டின் அருகாமையிலேயே தோட்டத்தில்தான் புதைத்திருக்கவேண்டும். இவ்வாறு என் புத்தியிற்பட்டது. இரவு நான் ஒரு இரும்புக்கோலை யெடுத்துக்கொண்டு பதினேரு மணிக்குமேல் உங்கள் வீட்டின் தோட்டத்திற்குள் பிரவேசித்தேன். அங்கு வீட்டிற் கருகாமையிலேயே உன் படுக்கையறையிலிருந்து இராஜசுந்தரியின் அறைக்குச்செல்லும் மார்க்கத்திற்கருகாமை

யில் தோட்டக்காரர்கள் தோண்டுவதற்கு அனுவசியமான விடங்களிலெல்லாம் இரும்புக் கோலால் குத்திக் குத்திப்பார்த்துக்கொண்டே சென்றேன். சுமார் ஒரு மணிநேரம் பார்த்தபின் கோல் ஏதோ கெட்டியான வஸ்துவின்மேல் படுவது தெரிந்தது. உடனே யங்கு தேடிப்பார்த்தபோது பெட்டி யகப்பட்டது. பேசாமலெடுத்து வந்தேன். இன்று உன் வரவுக்காக எதிர் பார்த்துக்கொண்டே வந்தபோது உன்னைச் சந்தித்தேன்.'' என்றான்.

இம்மனிதனுடைய அதிசயமான குணங்களையும், இவனுடைய நேர்மை, அன்பு, புத்தி சூக்குமம், முன் யோசனை, தைரியம், வைராக்கியம், சத்தியம் முதலியவற்றையும் கண்ட கிருஷ்ணராஜு சொல்லொணு வியப்படைந்து பிரமித்தான். கடைசியில் அவனை நோக்கி "நண்பரே! இப்பெட்டி போய்விட்டதே. இதை மறுபடி நான் பெறுவேனென்று கனவிலும் கருதவேயில்லை. இப்போது உமது அன்பும் முயற்சியுமின்றேல் இது எனக்குக் கிடைத்தே யிராது. ஆகையால் தாங்களே இதை யெனக்குப் பரிசாக அளித்ததாக நான் மதிக்கிறேன். முதலில் இது எனக்குக் கிடைத்தது தங்களாலேயே. இரண்டாம் முறையும் தங்களாலேயே கிடைத்தது. இதற்கு நான் தங்களுக்கு என்ன கைம்மாறு செய்வதென்று எனக்கு விளங்கவில்லை'' என்றான்.

கணபதிப்பிள்ளை:—வாலிபனே! நீ நல்ல முன் யோசனையோடு இவ்வுலகில் நடந்துகொண்டு இதிலுள்ள பெருமோசங்களுக்கும், மாயங்களுக்கும், அக்கிரமங்களுக்கும் சிக்காமல் தப்பித்துக்கொண்டால் அதுவே நீ செய்யும் கைம்மாறாகும். இப்போது உன் ஆஸ்தி கிடைத்துவிட்டது. நீ மறுபடி செல்வ

வந்தனுகிவிட்டாய். இனி என்ன செய்யவேண்டு மென்பது உன் ஏற்பாடு? நாளை யில்லை மறுநாள் இங்கிருந்து உங்கள் நாட்டிற்கு ஒரு கப்பல் புறப் படப்போகிறது'' என்றான்.

கிருஷ்ணராஜு:—நான் கட்டாயம் அக்கப்பலில் புறப் பட்டுப் போகிறேன்.

கணபதி:—"இத்தீர்மானப்படி பிறழாமல் நடந்துகொள். இராஜசுந்தரி உனக்குத் தகுதியான மனைவியல்ல வென்பதை யிதுகாறும் நிகழ்ந்த விஷயங்களா லேயே நீ யறிந்துகொண் டிருக்கலாம். போகும் போது நான் உன்னைச் சந்திப்பேன். உன் மூல மாக யாருக்கேனும் சங்கதி யனுப்பவேண்டி யிருக் கும். ஒருசமயம் யாருக்கேனும் கடிதமே கொடுப் பேன். ஆகையால் போகும்போது என்னைச்சந்தி. உன் பெட்டியை யெடுத்துக்கொண்டு போ. இது அகப்பட்டதைப்பற்றிய விஷயம் உன் அபிப்பிரா யப்படி நடக்கட்டும் என்று விட்டுவிடுகிறேன்'' என்றான்.

கிருஷ்ணராஜு பன்முறை யவனுக்கு மிக்க நன்றி யோடு வந்தனமளித்துவிட்டுப் பெட்டியை யெடுத்துத் தோள்மேல் வைத்துக்கொண்டு தோட்டத்தில் ஆட்கள் நடமாடாத வழியே வீட்டை நோக்கிச் சென்றான். நேயர்களே! இப்போது அவன் தோள்மேல் பல்லாயிரம் பவுன்கள் பெறத்தக்க பொன் இருக்கிறது. அந்தோ அதனாலேயே ஒருவனுக்குச் சந்தோஷமுண்டோ? இச் சமயம் கிருஷ்ணராஜின் மனோநிலைமை இன்னவிதமா யிருக்கிறதென்று கூறப்புகின் மிக்க வியாகூலத்தை யுண் டாக்கும். அவன் கனவில் நடந்து செல்பவன் போல் நிதானமாக வீட்டை நோக்கிச் சென்றான்.

40-வது அத்தியாயம்

பொன்னைப் பற்றிய ஆலோசனை.

கிருஷ்ணராஜு வீட்டிற்குச் சென்று பின் பக்கவழியாகத் தன் அறைக்குச் சென்று பெட்டியை மேஜை மேல் வைத்து விட்டு உட்கார்ந்தான். அச்சமயம் இராஜசுந்தரி அங்கில்லை. பத்து பதினைந்து நிமிடங்கள் கழித்து மிக்க சந்தோஷத்தோடு உள்ளே நுழைந்தாள். ஆனால் மேஜைமேலிருந்த அப்பெட்டியைப் பார்த்ததே அவள் பேரிடி விழுந்தவள்போ லாய்விட்டாள். ஒகோ! எல்லா சங்கதியும் வெளியாய்விட்டதென்று அவளுக்குப் புலப்பட்டுவிட்டது. ஆனால் அது எப்படி நேர்ந்ததென்று அவளுக்கு விளங்கவில்லை. அவள் மனதிற்குப் பெருந்திகிலுண்டாய் விட்டது.

கிருஷ்ணராஜு அப்பெட்டியைச் சுட்டிக்காட்டிவிட்டு "நீ இப்படிச் செய்வாயென்று நான் கருதவேயில்லை." என்றான். இராஜசுந்தரி "அய்யோ! என்னை மன்னிக்கவேண்டும்" என்று அவன் பாதங்களில் பணிந்து, "எனக்கு உன்மே லிருந்த அன்பினலேயே நான் இப்படிச் செய்யநேர்ந்தது. நீ என்னை விட்டுவிட்டுப் போயிருந்தால் நான் இறந்து போயே யிருப்பேன். இது உண்மை. நீ மறுநாள் அப்பெட்டி போய்விட்டதற்காக விசனப்பட்டபோது எனக்குண்டான வியாகூலம் சொல்லத்தரமல்ல. ஆனால் காதலின் வலிமை மிக்க பலமானது. இதற்காக என்னை நீ வெறுக்கலாகாது..." என்று அவள் எவ்வளவு கூறியும் கிருஷ்ணராஜு அவளையெழுந்திரு வென்றுகூடக் கூறவில்லை.

அதனல் அவள் மிக்க வியாகூலத்தோடு "அந்தோ! இதற்காக என்னை யடியோடு வெறுத்து விடலாமோ.

நமக்குக் கலியாண மாகாவிட்டாலும் நான் கடவுளறிய உன் மனைவி யல்லவோ! என்னை அடியோடு வெறுத்து விடவாபோகிறீர்?'' என்று கண்ணீர் விட்டாள்.

இவர்களுக்குள் நடந்த வாதத்தைப் பற்றி இங்கு விவரித்துக் கூறுவது உசிதமாக நமக்குத்தோன்றவில்லை. ஒரு கன்னிகையின்மேல் காதற்பித்து பிடித்திருக்கும் ஒரு வாலிபனை அக்கன்னிகை தன் பிரியத்திற்கு இணங்கும்படி மயக்கிவிடுவது எவ்வளவு சுலபம்! அங்ஙனமே ஸ்திரீயின் காதலில் மயங்கி அவள் வழிப்படி நடக்காத மனோ வல்லமையுடைய மனிதர் மிகச்சொற்பமேயென்று கூறலாம். உலக சுபாவமே அப்படி யிருக்கின்றது. அதன் படியே இராஜசுந்தரியின் நயவஞ்சகமான தந்திரவார்த்தைகளால் கிருஷ்ணராஜனு மயங்கிக் கடைசியில் அவளை மன்னித்து விட்டதாய் வாக்களித்ததோடு "இப்பொன்னை என் சுற்றத்தார்க்கு அனுப்பிவிடுகிறேன். நான் உன்னை விட்டுப் பிரிந்துபோவதில்லை" என்று வாக்களித்து விட்டான்.

இராஜசுந்தரி:—"என் காதலரே! இப்போது இப்பொன் பெட்டி யகப்பட்டதைப் பற்றி என் தந்தைக்குக் கூறவேண்டியது அவசியமோ?'' என்று கேட்டாள்.

கிருஷ்ணராஜன்:—இப்போது அதைப்பற்றி அவரிடம் கூறினல் அது எங்கிருந்து அகப்பட்டது? யார் எடுத்துச்சென்றது? என்று பல கேள்விகளுண்டாகும். அவற்றையெல்லாம் மறைக்கப் பல பொய்கள் கூறவேண்டும். தோட்டத்திலிருந் தகப்பட்டதென்றுலோ சர்வ சந்தேகங்களுக்கு மிடமுண்டாகும். ஏனெனில் களவாட வந்தவன் களவாடிய பொருளை யதே வீட்டில் புதைத்து விட்டுப் போவானென்று

கூட யாரேனும் நினைப்பார்களோ? அதற்கு மேல் யார் திருடினார்கள் என்று ஒவ்வொரு கேள்வியா யுண்டாகிக் கடைசியில் யாவும் வெளிவர நேரிடும்.

இராஜசுந்தரி:—“என் பெரிய தந்தை மிக்க நேர்மையான நெறியுடையவர். நான் அதை யெடுத்து ஒளித்து வைத்தே னென்பது மட்டும் அவருக்குத் தெரிந்தால் அதோடு என் மேல் மிக்க கோபமும் வெறுப்பும் அவருக்குண்டாய்விடும்.” என்றாள்.

கிருஷ்ணராஜன் சற்று நேரம் சிந்தித்து “இது அகப் பட்டதைப்பற்றி அவருக்குக் கூறாமலிருப்பதே நலம் என்று எனக்குத் தோன்றுகிறது” என்றான்.

இராஜசுந்தரி அதைக் கேட்டதே மிக்க சந்தோஷ மடைந்து கணபதிப்பிள்ளை இதைப்பற்றி என் தந்தைக் குக் கூறமாட்டாரல்லவா?” என்றாள்.

வாலிபன்:—“அவர் அப்படிச் செய்யக்கருதி யிருந்தால் பெட்டியை யெடுத்து வந்து நேராய் உன் பெரிய தந்தையிடம் கொடுத்து எல்லா சங்கதிகளையும் கூறி விட்டிருக்கலாமே. இல்லை யில்லை. இந்த விஷயத்தில் என் பிரியப்படி நடந்துகொள்ளவே அவர் விட்டு விட்டார்.” என்றான்.

அன்று பினகபாணிப்பிள்ளை நகரத்திலிருந்து வந்த போது இராஜசுந்தரியும் கிருஷ்ணராஜனும் தங்கள் மனச் சந்தோஷத்தை மிக்க ஜாக்கிரதையோடு அடக்கிக்கொண் டிருந்தார்கள். கணபதிப்பிள்ளை யச்சங்கதியை வெளியிட மாட்டானென்று கிருஷ்ணராஜன் அக்கன்னிகை யிடம் கூறினனெனினும், அவன் மனதில் மட்டும் கொஞ்சம் கலக்கம் இருந்தது. அதோடு தான் அடுத்த கப்பலில் ஊருக்குச் செல்வதாகக் கணபதிப்பிள்ளையிடம் கூறி யிருக்கிறான். இப்போது போவதில்லை யென்று தீர்மானித்

திருக்கிறான். இதைப்பற்றி கணபதிப்பிள்ளை என்ன கருதுவானோ என்பது மற்றொரு கலக்கம். எதற்கும் சீக்கிரம் அவனைச் சந்தித்துத் தான் தன் காதலைக் கருதி இராஜசுந்தரியை மன்னித்து விட்டதையும், ஊருக்குப் போவதை நிறுத்திவிட்டதையும் அவனிடம் கூறவேண்டுமென்று தனக்குள் தீர்மானம் செய்து கொண்டான்.

மறுநாள் பகல் இராஜசுந்தரி வீட்டில் வேலையாயிருக்கும் சமயத்தில் கிருஷ்ணராஜு புறப்பட்டுக் கடலோரம் சென்று தான் வழக்கமாகக் கணபதிப்பிள்ளையைச் சந்திக்கும் இடத்தில் உட்கார்ந்தான். நெடுநேரம் காத்திருந்தும் கணபதிப்பிள்ளை வராததால் வாலிபன் எழுந்து நேராய் அவனுடைய வாசஸ்தலத்திற்குச் சென்றான்.

அச்சமயம் கணபதிப்பிள்ளை முன்னாள் கிருஷ்ணராஜிடம் பேசியபோது இருந்த விடத்திலேயே உட்கார்ந்து ஏதோ கடிதம் எழுதிக்கொண் டிருந்தான். வாலிபனைக் கண்டதும் வியப்படைந்து சட்டென்று தன் கையிலிருந்த எழுதுகோலைக் கீழே வைத்துவிட்டு அவனைச் சற்றுநேரம் உற்று நோக்கிவிட்டு "ஏது இப்போது வந்தது? கப்பல் நாளைக்குச் செல்கிறது. அதுகாறும் நான் உன்னை யெதிர்பார்க்கவில்லையே!" என்றான்.

கிருஷ்ணராஜு மனக்கலக்கத்தோடும் தடுமாற்றத்தோடும் "தாங்கள் என்னை முட்டாளென்று நினைப்பீர்களோ வென அஞ்சுகிறேன். நான் என் தீர்மானத்தை மாற்றிவிட்டேன்" என்றான்.

கணபதிப்பிள்ளை மனவெறுப்போடு "உன் அபிப்பிராயத்தைப்பற்றி நான் என் கருதவேண்டும். உன் ஸ்திரமல்லாத சிந்தனையைப்பற்றி நான் சிரமம் எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியமேயில்லை" என்றான்.

கிருஷ்ணராஜு:—"இல்லை, தாங்கள் கூறுவது உண்மை

தான். ஆயினும் இதுவரை நமக்குள் நடந்த விஷ யங்களால்...'' என்று தடுமாறிக்கொண்டே மொழிந் தான்.

கணபதிப்பிள்ளை கோபப் பார்வையோடு தட் டென்று எழுந்து வாலிபன் எதிரில் நின்று, “உண்மை யென்னவெனில் நீ காம மயக்கம் கொண்டவன். அப் பெண்ணின் மாய வலையில் பூரணமாகச் சிக்கிக்கொண் டாய். அவள் உன்னை மயக்கிவிட்டாள். நீ மயங்கிவிட் டாய். அடடா! எப்படிப்பட்ட தீரர்களும் பெண் மாயை யால் மயங்கி யழிகிறார்கள். கத்தி, ஈட்டி, துப்பாக்கி இவைகளுக்கெல்லாம் அஞ்சாமல் சண்டையிட்டுச் செய மடையும் சுத்த வீரரெல்லாம் பெண்பேயா லாட்டியலக் கழிக்கப்படுகிறார்கள். உலக அனுபவமே யறியாத சிறுவ னாகிய நீ எம்மாத்திரம். நான் உன்னைத் திடபுத்தி யுடை யவனென்று கருதியது தவறு'' என்றான்.

அவன் வார்த்தை மிக்க கடுகடுப்பாக விருந்தது. வாலிபன் மனோவேதனை யடைந்தான். என்ன பதில் கூறுவதென்று அவனுக்குச் சற்றும் விளங்கவில்லை. மிரள மிரள விழித்தான். கணபதிப்பிள்ளை மறுபடி யவனை நோக்கி,

“அப்படியானால் பாவம் இருபத்தைந்து வருடங் களாகச் சிறைச்சாலையில் அக்கிரமமாக அடைத்து வைக் கப்பட்டிருக்கும் கிழவனாகிய உன் பாட்டனை யடியோடு காற்றில் பறக்க விட்டுவிட்டாய். உன் அத்தை மகளாகிய உண்ணாமுலை இச்சமயம் எத்தகைய கஷ்டமான நிலைமையி லிருக்கிறாளோ என்று நீயே இரண்டு மூன்று நாட்களு க்கு முன்புதான் கூறினையே, அக்கன்னிகையை யடியோடு மறந்து விட்டாயாக்கும்'' என்றான்.

அச்சமயம் கணபதிப்பிள்ளையின் முகத்தில் கோப

மும் வெறுப்பும் பூரணமாக விருந்தன. கிருஷ்ணராஜின் மனோவேதனையோ சொல்லத்தரமல்ல. அவன் மிக்க கஷ்டத்தோடு தன் கண்களில் நீர்விடாது அடக்கிக்கொண்டிருந்தான். தன் செய்கையில் குற்றமிருக்கிறதென்றும் கணபதிப்பிள்ளை காட்டும் கோபத்திற்கும் வெறுப்பிற்கும் காரணமிருக்கிறதென்றும் அவன் மனதிற்கே புலப்படுகிறது. காதல் ஒரு பக்கம் அவனை யுறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கிறது. என் செய்வான் பாபம். மனதை யொருவாறு சற்று திடப்படுத்திக்கொண்டு,

"அய்யா! என்னை யவ்வளவு அயோக்கியனாகவும் சுயநலம் கருதுபவனாகவும் நினைக்கவேண்டாம் என்று பிரார்த்திக்கிறேன். அப்பொன்னை யப்படியே அடியோடு என் சுற்றத்தார்க்கு அனுப்பி விடுகிறேன். நான் ஒருகாலும் அதை யெடுத்துக்கொள்ள மாட்டேன். அதை என் ஊருக்கு அனுப்பும் விஷயத்தைப்பற்றி செய்யவேண்டிய ஏற்பாட்டில் தாங்கள் தயவு வைத்துக் கொஞ்சம் உதவி செய்தால்..." என்றதே,

கணபதிப்பிள்ளை வியப்போடு திடுக்கிட்டு "என்ன! நானா? என்? பினாகபாணிப்பிள்ளை—ஓகோ சரி சரி தெரிகிறது. தெரிகிறது. அப்பெட்டி யகப்பட்டதைப்பற்றி பினாகபாணிப்பிள்ளையிடம் கூறாமலே அடியோடு மறைத்து வீட்டீர்கள். ஆம் ஆம்" என்றான்.

கிருஷ்ணராஜன்:—அய்யா! இராஜசுந்தரிக்காக நான் அவ்வாறு செய்யத் துணியவேண்டிய தாயிற்று. நான் அவள்மேல் பூரணமான காதல் கொண்டிருக்கிறேன். தங்களுக்கு அவளுடைய குணங்கள் மட்டும் தெரியுமாயின்..." என்றதே,

கணபதிப்பிள்ளை:—என்! இப்போது! அவள் உன்னை மயக்கித் தந்திரமாய்த் தன் மாயவலையில் போட்டுக்

கொண்ட விஷயத்தாலேயே அவளுடைய குணங்கள் எத்தகையவையென்று நன்றாய் விளங்குகின்றன. இன்னும் பார்க்கவேண்டிய அவசியமேயில்லை'' என்றான்.

கிருஷ்ணராஜு:—தாங்கள் மிக்க கோபமாகப் பேசுகிறீர்கள். ஒரு வேண்டுகோள். பொன் மறுபடி யகப்பட்டதைப்பற்றி தயவுசெய்து பிணகபாணிப்பிள்ளையிடம் கூறாமலிருக்கத் தங்களை வேண்டிக் கொள்கிறேன்.

கணபதிப்பிள்ளை:—நான் ஒருபோதும் அத்தகைய காரியத்தைச் செய்யவேமாட்டேன். உன் சம்பந்தமான விவகாரத்தில் மறுபடி தலையிடவேமாட்டேன். நான் உன்னை நேர்மையானவனென்றும், புத்திமதிப்படி நடப்பவனென்றும் நம்பியதே பெருந்தவறு. உலகிலுள்ள மனிதரின் யோக்கியதையை யறிந்துதான் நான் நெடுநாட்களாக அவர்கள் முகத்திலேயே விழிக்காமல் ஒருவருக்கும் வாக்காலேனும் செய்கையாலேனும் ஒரு உதவியும் செய்யாமலிருந்தேன். இத்தனை நாள் கழித்து ஒரு ஆளையேனும் நல்வழியில் திருப்பி துஷ்டர் அக்கிரமஸ்தர்களின் கையிற் சிக்கி யழியாமல் தப்பவைக்கலாமென்று நல்ல எண்ணங்கொண்டு வலிய உதவி செய்யப்போனால் முகத்தின்மே லடிக்கப்பட்டுப் பின்னால் உதைத்துத் தள்ளப்படுகிறேன். சே சே! துஷ்ட உலகமே. நீ கொடிய விஷமே...'' என்றான்.

கிருஷ்ணராஜு:—"அய்யா! என்னை யப்படிக் கருத வேண்டாம். நான் நன்றி யற்றவனல்ல. கடவுளறிய தங்கள் விஷயத்தில் எவ்வளவோ நன்றி கருதுகிறேன்'' என்றான்.

கணபதிப்பிள்ளை, "சரி சரி இனிப் பேசுவதில் பயனில்லை, வீண், போய் வா" என்றான். கிருஷ்ண ராஜு மிக்க மனோ வியாகூலமடைந்து "அய்யா நாம் இம்மாதிரி பிரியலாகாது..." என்றான்.

கணபதிப்பிள்ளை ஆத்திரத்தோடு "ஒன்றும் பேச வேண்டாம். போ போ!" என்று கூறிவிட்டு உட்கார்ந்து எழுதத் தொடங்கிவிட்டான். வாலிபன் கால் மணி நேரம் வரையில் அவன் எதிரில் முகவாட்டத்தோடு நின்று கொண்டிருந்தான். கணபதிப்பிள்ளை ஏறெடுத்துப்பார்க்கவுமில்லை. ஒரு வார்த்தையேனும் பேசவுமில்லை. கடைசியில் மிக்க மனோவேதனையோடு வீட்டை நோக்கிச் சென்றான். அவன் மனம் மிக்க வியாகூலமடைந்திருந்தது.

இவ்வாறே ஐந்தாறு நாட்கள் கழிந்தன. இதற்கிடையில் கிருஷ்ணராஜு பினாகபாணிப்பிள்ளையிடம் பேசும்போதெல்லாம் நடந்த சங்கதியை யப்படியே கூறிவிடலாமென்று அவன் மனம் தூண்டியது. இதுகாறும் அத்தகைய சூதுவாதான விஷயங்களில் அவனுக்குப் பழக்கமில்லை. களங்கமற்ற மனதுடன் இருந்தான். இப்போது அக்கன்னிகையின்மேல் கொண்டகாதலால் அவன் இத்தகைய பொய் கூறவும், சூதுவாதிற்கும் உடன்படலானான்.

பொன்னோ பேசாமல் அவன் அறையிலுள்ள அலமாரியில் பதனமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் பினாகபாணிப்பிள்ளைக்குத் தெரியாமல் அப் பொன்னை அனுப்புவதற்குக் கிருஷ்ணராஜு என்ன முயற்சி செய்தும் சந்தர்ப்பம் வாய்க்கவேயில்லை. இதற்கிடையில் கிருஷ்ணராஜு கணபதிப்பிள்ளையைச் சந்திக்கவேயில்லை.

பின்னும் இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. இதற்குள் இராஜசுந்தரி கிருஷ்ணராஜை மணம்புரிந்து கொள்

ளும் சங்கதி அந்தப் பிரதேசங்களிலெல்லாம் நன்ருகத் தெரிந்துவிட்டது. பிஞகபாணிப்பிள்ளையின் குடும்பத்திற்கு நண்பர்களும் அறிமுகமானவர்களும் மணமகன் மணமகளைக்காண வந்தார்கள். அக்கௌரவத்தால் வாலிபன் மிக்க சந்தோஷமடைந்தான். கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளனைத்தும் செய்யத் தொடங்கிவிட்டார்கள். வாலிபனும் கலியாண தினத்தை மிக்க ஆவலோடு எதிர் பார்த்துக்கொண் டிருக்கிருன்.

நேயர்களே! இப்போது கிருஷ்ணராஜின் மனம் நிம்மதியாயிருக்கிறதென்று எங்கேனும் நினைக்கலாகுமோ! ஒருபோதுமில்லை. தன் பாட்டனருக்குக் கடிதம் எழுதவோ அவனுக்குப் பெரும்பீதியாயிருந்தது. தன் கலியாண சங்கதியைப்பற்றி அவர்களுக்குத் தெரிவித்தால், உண்ணமுலை தனக்குப் பெருந்துரோகம் செய்ததாகக் கருதுவாள் என்று அது ஒருபுறம் வாதிக்கிறது. இந்தப் பெருங்கலக்கத்தில் அவர்களுக்குக் கடிதமே எழுதாம லிருந்து விட்டான். இதனுல் அவன் அப்பொன்னைத் தன் தேயத்திற்கனுப்பவேண்டி தக்க சந்தர்ப்பத்தை மிக்க ஆவலோடு எதிர் பார்த்துக்கொண் டிருந்தான். அவன் எத்தனை முறை முயற்சிசெய்தாலும் ஒவ்வொரு முறையும் ஏதேனும் ஒரு இடையூறு நேர்ந்துகொண்டே யிருந்தது. இடையில் கலியாண ஏற்பாடு துரிதமாக நடைபெற்றுக்கொண் டிருக்கிறது.

இப்போது இராஜசுந்தரியும் கிருஷ்ணராஜனும் வர வர நெடுநேரம் உலாவிவரும் வழக்கமுடையவர்களாகி விட்டார்கள். அப்பொன் அங்கிருக்குமட்டும் இராஜசுந்தரிக்குப் பெருந்திகிலாகவே யிருந்தது. ஏனெனில் கிருஷ்ணராஜன் எந்த சமயத்தில் முரட்டுப் பிடிவாதங் கொண்டு ஊருக்குப்போகத் துணிந்துவிடுவானேவென்ற

பெரும்பீதியவள் மனதில் உண்டாய்விட்டது. உண்மையில் அவள் முன்னமே இரகசியமாக அவன் மனேவியாய் விட்டிருக்கிருள். அந்தோ! நேயர்களே! அந்நாட்டுதுர் ஆசாரத்திஞல் உண்டாகும் தீங்குகள் எத்தகையவையென்பதைச் சற்று நோக்குங்கள். மணமுடியாத ஒரு வாலிபனும் ஒரு கன்னிகையும் தாராளமாகப் பேசலாம், ஒருவருக்கொருவர் தம் காதலை வெளியிட்டுக்கொண்டபின் பெரியோர்க்கு அதைப்பற்றித் தெரிவிக்கலாம், இது தான் உயர்ந்த நாகரீகம் என்ற கொள்கையே இத்தகைய பெருந்தீங்குகளுக்கெல்லாம் காரணம் என்பது நன்கு விளங்கும்.

இதற்கிடையில் கிருஷ்ணராஜு கணபதிப்பிள்ளையைச் சந்திக்கவேயில்லை. பொன்னை யனுப்பமுடியாமலிருப்பதும் அது அகப்பட்ட இரகசியத்தைப் பிஞகபாணிப்பிள்ளைக்குக் கூருமலிருப்பதும் அவன் மனதில் பெரிய வேதனையாகவே யிருந்தது.

ஒருநாள் கிருஷ்ணராஜு தோட்டத்தின் வழியாகச் சென்றுகொண் டிருக்கையில், தற்செயலாகக் கணபதிப்பிள்ளையைச் சந்தித்தான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே சற்றுநேரம் மௌனமாக நின்ருர்கள். கடைசியில் கிருஷ்ணராஜு "நான் தங்களையிந்தப் பத்து நாட்களாகக் காணவேயில்லை" என்ருன்.

கணபதிப்பிள்ளை "நீ உலவும் வழியில் நான் வரவில்லைபோலும். ஆயினும் நீ என்னைக் காணவேண்டுமென்று கருதி யிருந்தால் என் வீட்டிற்கு வந்திருக்கலாமே." என்ருன்.

கிருஷ்ணராஜு:—நாம் கடைசியில் சந்தித்ததிலிருந்து தாங்கள் என்மேல் மிக்க வெறுப்படைந்திருக்கிறீர்களென்று அஞ்சிக்கொண் டிருந்தேன்.

கணபதிப்பிள்ளை:—கடந்த சங்கதிகளைப்பற்றி பேசுவதில் பயனில்லை. நீ இராஜசுந்தரியை மன்னித்துவிட்டாய். கலியாண ஏற்பாடுகள் துரிதமாக நடக்கின்றன. நீ யினி அந்த ஒப்பந்தத்திலிருந்து தவிரக் கூடாது. உன்னை யப்படிச் செய்யும்படி நானும் கூற நியாயமில்லை. அதுபோகட்டும் பொன்னை யென்ன செய்தாய்?

கிருஷ்ணராஜு:—அந்தோ! அந்தப் பொன்னை என் சுற்றத்தாருக்கனுப்ப எனக்கு வழி கிடைக்காம லிருப்பதே எனக்குப் பெரிய மனோவேதனையாகி விட்டது. அதை நான் களவாடி வைத்துக்கொண்டிருந்தால் எவ்வளவு மனோவேதனை யெனக்கிருக்குமோ அதனினும் அதிக வேதனையாயிருக்கிறது.

கணபதிப்பிள்ளை:—ஆம். மனச்சாட்சிக்கு ஒவ்வாத காரியத்தைச் செய்தால் மனோவேதனைதா னுண்டாகும். ஆனல் இந்த விஷயத்தில் நான் உனக்கு உதவி செய்யப் பிரியமாக விருக்கிறேன். உன் பாட்டனரும் உன் அத்தை குமாரத்தியும் இருக்கும் பரிதாபமான நிலைமைக்காக நான் இவ்வுதவியைச் செய்கிறேன்.

கிருஷ்ணராஜு:—ஆ! இவ்வளவு உதவி மட்டும் தாங்கள் செய்தால் என் உயிருள்ளமட்டும் இதை மறக்க மாட்டேன்.

கணபதிப்பிள்ளை:—"இருக்கட்டும். இவ்விஷயத்தில் உனக்கு உதவி செய்கிறேன் என்று கூறி விட்டேன். அப்படியே செய்வேன். இன்றிரவு சரியாகப்பனிரண்டுமணிக்கு நான் ஒரு நம்பகமான ஆளை அனுப்புகிறேன். அவன் உன் படுக்கை யறையின் சாளரத்திற்கு நேராகக் கீழே வந்து நிற்பான். நீ அப்பெட்டியை ஒரு கயிற்றில் கட்டிக் கீழே விட்டு

விடு. இந்த ஏற்பாட்டால் பெட்டி அங்கிருந்து கொண்டு வரப்படுவதும் வெளியிலனுப்பப்படுவதும் ஒருவருக்கும் தெரியாமற் போம். நாளைக்குச் செல்லும் கப்பலில் அப்பெட்டி உன் சுற்றத்தார்க்கு அனுப்பப்படும். அதோடு நீ யுன் சுற்றத்தார்க்கு ஒரு கடிதமும் எழுதிக்கொண்டு வா.'' என்றான்.

கிருஷ்ணராஜு மிக்க சந்தோஷமடைந்து "ஆ! தங்கள் தயாள குணத்திற்கும் தாங்கள் செய்யும் உதவிக்கும் நான் என்னதான் கைம்மாறு செய்யப்போகிறேன்'' என்று அவன் கரங்களைப்பற்றிக் கொண்டான்.

கணபதிப்பிள்ளை:—போதும். ஆ! இன்னொரு சங்கதி. அன்று நீ ஊருக்குச் செல்வதாகக் கூறியபோது நான் ஏதேனும் சங்கதி கூறி யனுப்புவேன், அல்லது யாருக்கேனும் கடிதம்கொடுப்பேன் என்று கூறினேனல்லவா? அவ்வாறே ஒரு கடிதம் எழுதிக்கொடுக்கிறேன். அக்கடிதம் உன் பாட்டனுருடைய மேல் விலாசத்திற்கு எழுதப்பட்டிருக்கிறதென்று வியப்படையாதே.

கிருஷ்ணராஜு மிக்க வியப்பும் கலக்கமுமடைந்து என்ன? பாட்டனுருக்கா? என்றான். கணபதிப்பிள்ளை "ஆ! நீ அதைப்பற்றி கலக்கமடையவேண்டாம். நான் உன் மேல் கெட்ட அபிப்பிராயமுண்டாகும்படி உன் பாட்டனுருக்கு ஒன்றுமே எழுத மாட்டேன். நான் எழுதுவது அவரைப்பற்றியே. அவருக்குத் தேறுதல் கூறவே நான் இக்கடிதத்தை யெழுதுகிறேன்.'' என்றான்.

கிருஷ்ணராஜு:—எத்தனை உதவிகள் தாங்கள் செய்கிறீர்கள். நான் எப்படித்தான் இவற்றிற்கு என் நன்றியைக் காட்டுவேன்.

கணபதிப்பிள்ளை:—"இருக்கட்டும். இரவு பனிரண்டு

மணிக்கு ஆயத்தமாயிரு. என் ஆள் அந்த வேளைக்குச் சரியாய் வருவான்.'' என்றான்.

அவர்கள் பேசிக்கொண்டிருந்த விடத்தில் ஒரு பக்கம் மரங்கள் அடர்ந்திருந்தன. கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறிவிட்டுத் திரும்பிச்சென்றதே, அம்மரங்களின் பின் யாரோ ஆள் இருந்து செல்வதுபோல் அரவங்கேட்டதுமன்றி ஆள் செல்வது போலும் கிருஷ்ணராஜின் கண்களுக்குப் புலப்பட்டது. அவன் உடனே அங்குசென்று நாற்புறங்களிலும் பார்த்தான். ஒருவரும் புலப்படவில்லை. அதற்குள் கணபதிப்பிள்ளையும் கண்களுக்கு மறைந்து போய் விட்டான். அதன் மேல் கிருஷ்ணராஜு நேரே வீட்டிற்குத் திரும்பினான்.

41-வது அத்தியாயம்

கடவுளின் அதிசயத் தண்டனை.

கிருஷ்ணராஜு வீட்டிற்குச் சென்றதும் இராஜசுந்தரியிடம் நடந்த சங்கதி யாவும் கூறினான். அந்தப் பொன் இன்னும் அனுப்பப்படாமலிருந்தது அவளுக்குப் பெருந் திகிலாகவே யிருந்தது. இப்போது அதற்கு வழி யேற்பட்டதோடு கிருஷ்ணராஜு பொன்னை மட்டும் அனுப்பிவிடுவதாகக் கூறினனேயன்றித் தான் கூடப்போவதாய்ச் சற்றும் கூறவில்லை. ஆகையால் அவளுக்கு மிக்க சந்தோஷமாகிவிட்டது.

இராப்போஜனம் முடிந்தபின் பினகபாணிப்பிள்ளை கிருஷ்ணராஜிடம் நெடுநேரம் சம்பாஷிப்பது வழக்கம். அன்று அவன் பக்குவமாகப் பதினொருமணிக்கு முன்பே அவரிடமிருந்து பிரிந்து தன் படுக்கையறைக்குச் சென்றான். சென்றதும் அறையின் கதவை மூடிவிட்டுப் பொன்

இருக்கும் பெட்டியை யெடுத்து அதைச் சாளரத்தின் வழியாகக்கீழே விடுவதற்கு ஒரு நீண்ட கயிற்றின் முனையில் அதைக் கட்டி ஆய்த்தமாக வைத்துக்கொண்டான்.

இரவு கொஞ்சம் இருளாகவே யிருந்தது. சாளரத்திலிருந்து பார்த்தால் கட்டிடத்தினருகில் வரும் ஆள் இன்னவனென் றறியமுடியாது. ஆயினும் ஆள் வருவது தெரியும். கணபதிப்பிள்ளை யாரை யனுப்புவானென்று கிருஷ்ணராஜு சிந்தித்தான். அந்த விஷயம் அவனுக்கு வியப்பாகவே யிருந்தது. ஏனெனில் கணபதிப்பிள்ளையின் வேலைக்காரனாகிய சம்பு என்பவன் ஊமை; அதோடு செவிடு. ஆனால் கணபதிப்பிள்ளைக்கு வேறு யாரும் அறிமுகமானவர்களில்லை. ஆதலின் கடைசியில் அவனைத்தான் அனுப்புவான் என்றெண்ணிக்கொண்டான். இவ்வாறு அவன் மணி பனிரண்டாகு மட்டும் சிந்தித்துக்கொண்டேயிருந்தான்.

மணி பனிரண்டாகப் போகிறது. அறையில் தீபமிருந்தால் பெட்டியைச் சாளரத்தின் வழியாக விடும்போது அடுத்த வீட்டிலிருந்து யாரேனும் பார்த்தால் தெரியும். ஆகையால் வாலிபன் தீபத்தை யணைத்துவிட்டுச் சாளரக்கதவைத் திறந்தான். அச்சமயம் கட்டிட ஓரத்திலிருக்கும் செடிகளில் ஆள் வருவதுபோல் சத்தம் கேட்டது. மறுநிமிடம் ஒரு மனிதன் செடிகளிலிருந்து வெளியில் வந்து சாளரத்திற்கு நேராக நின்றான்.

கிருஷ்ணராஜு பெட்டியை யெடுத்து வந்து சாளரத்தின்மேல் வைக்கப்போனான். அச்சமயம் டுமீல் என்று துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது. உடனே ஒரு ஆள் பொத்தென்று தரையில் விழும் சத்தம்கேட்டது. வாலிபன் திடுக்கிட்டு சாளரத்தில் எட்டிப் பார்த்தான். அச்சமயம் இரண்டு பேர் தோட்டத்திலிருந்து

ஆள் விழுந்த விடத்தை நோக்கித் துரிதமாக வந்து கொண்டிருப்பதைக் கண்டான். அவர்களில் ஒருவன் கையில் தீபம் வைத்துக்கொண்டிருந்தான். அந்த வெளிச் சத்தால் அவர்களிருவரில் ஒருவன் வீட்டுக்காரியஸ்த னென்றும் மற்றவன் ஒரு வேலைக்காரனென்றும் தெரிந் தது.

கிருஷ்ணராஜு மிக்க கலவரத்தோடு "அய்யோ என்ன சங்கதி?" என்றான்.

காரியஸ்தன்:—"ஒன்றுமில்லை. ஒரு கள்ளன், தக்க பரிசு பெற்றான்" என்றான்.

இதைக்கேட்டதே கிருஷ்ணராஜு பேரிடி விழுந்த வனாகி அய்யோ கள்ளனா! வென்றலறினான். கணபதிப் பிள்ளையின் நம்பிக்கையான வேலைக்காரன் சம்பு வென் பவனே பெட்டிக்காக வந்து கொல்லப்பட்டான் என்றே வாலிபன் எண்ணிக்கொண்டான். அவன் மனம் மிக்க வேதனை யடைந்தது: அலறிக்கூவி விட விருந்தான். எல்லா சங்கதிகளையும் வெளியிடவே யிருந்தான்.

அச்சமயம் தன் தோளை யாரோ தொடுவதை யுணர் ந்து சட்டென்று திரும்பிப் பார்த்தான். இராஜசுந்தரி அவனருகில் வந்து நின்று "அய்யோ! பேசாமலிரு; ஒன்றும் பேசவேண்டாம். "அவர்கள் கீழே இருக்கிறார் கள். நாம் பேசுவது கேட்கும்." என்றாள்.

கிருஷ்ணராஜு "கேட்டால் கேட்கட்டும். எல்லாம் தெரிந்தே தீரவேண்டும். என்ன! அநியாயமாய் நம் பிக்கையான நிரபராதி கொல்லப்பட்டான். அய்யோ அந்தப் பாபம் என் தலைமேல் தானே" என்றான்.

இராஜசுந்தரி "கூறினால் கூறும். ஆனால் ஒன்று. பெட்டி யகப்பட்ட சங்கதி வெளிவந்தால் அதைப்பற்றிய

எல்லா விஷயங்களும் வெளிப்படவே வேண்டும். அப்புறம் என் கெதி யென்னகும்'' என்ருள்.

அச்சமயம் கீழே யிருந்து "ஆ நீலன்'' என்ற சத்தம் இவர்கள் செவிகளிற் கேட்டது. உடனே கிருஷ்ணராஜு சாளரத்தில் எட்டிப்பார்த்தான். அங்கிருந்த இருவரும் தீப வெளிச்சத்தில் கீழே இறந்து கிடப்பவன் முகத்தைப் பார்த்துக்கொண் டிருக்கிருர்கள். காரியஸ்தன் "ஆம். அக் கள்ளப்பயல் நீலனே. அடுத்த தோட்டத்தில் வேலை செய்பவன். இவனே பொன் பெட்டியைக் களவாடியிருப்பான்'' என்ருன்.

இராஜசுந்தரி:—"நீலனும் பேசாமலிரு'' என்ருள்.

கிருஷ்ணராஜு:—"ஆ! இப்போது எனக்கு நினைவிற்கு வருகிறது. நானும் கணபதிப்பிள்ளையும் பேசிக்கொண்டிருக்கையில் யாரோ ஒரு ஆள் அருகிலிருந்த செடிகளின் மறைவில் இருந்ததாக எனக்குத்தெரிந்தது. பிறகு பார்த்தபோது காணவில்லை. இனி ஒரு சங்கதியும் கூறமாட்டேன்'' என்ருன்.

இராஜசுந்தரி அவனைச் சந்தோஷத்தோடு ஆலிங்கனம் செய்துகொண்டு போய்விட்டாள். உடனே கிருஷ்ணராஜு கீழிறங்கிக் கொலை நடந்திருக்குமிடத்திற்குச் சென்ருன். அதற்குள் பிநாகபாணிப்பிள்ளையும் துப்பாக்கி சத்தம்கேட்டு அங்கு வந்திருந்தார். கிருஷ்ணராஜு பெட்டியை யெடுத்து அலமாரியில் வைத்துவிட்டு "யாரது நீலனு?'' என்று கூறிக்கொண்டே அருகில் சென்ருன்.

பிநாகபாணிப்பிள்ளை:—"ஆம் ஆம். அக்கள்ளப்பயலே. நீ கலவரப் படவேண்டாம். இராஜசுந்தரியிடம் யாரேனும் போய் கூறினர்களோ! அல்லது அவள் என்ன கலவரமடைகிருளோ?'' என்ருர்.

அதற்குள் இராஜசுந்தரியே யங்கு வந்து "அப்பா! என்னைப்பற்றி கலக்கம் வேண்டாம். ஆனால் முதலில் நான் பெருந் திகிலேயடைந்துவிட்டேன்" என்றாள்.

பினாகபாணிப்பிள்ளை:—"நீங்கள் போய் சயனித்துக் கொள்ளுங்கள். இக் கள்ளப்பயலுக்குத் தக்க தண்டனையே கிடைத்தது. உன் பெட்டி களவு போனது முதல் நான் இரவில் இருவர் தோட்டத்தில் காவல் இருக்கும்படி ஏற்பாடு செய்திருந்தேன்" என்றார்.

காரியஸ்தன்;—"தங்கள் கட்டளைப்படி இன்று நாங்கள் இருவரும் காவல் இருந்தோம். நாங்கள் வேலியோரமே யுட்பக்கம் சுற்றிக்கொண்டு வரும்போது யாரோ ஒருவன் வேலியைத்தாண்டி மெதுவாய் உட்பக்கம் வருவதைக் கண்டோம். அவன் பதுங்கிக்கொண்டே செடிகளினிடையில் நுழைந்து சென்று கிருஷ்ணராஜின் அறையின் கீழ் நின்றான். உடனே நான் சுட்டேன். என் நண்பனும் சுட்டான். இவ்வளவே சங்கதி" என்றான்.

பினாகபாணிபிள்ளை :—சரி, இச்சவத்தைக் கொண்டுபோய் வெளியறையில் போடுங்கள். காலையில் அவன் எஜமானுக்கும் மரணவிசாரணை உத்தியோகஸ்தருக்கும் சங்கதி தெரிவியுங்கள். இக்கள்ளன் இறந்ததற்காக நீங்கள் சுகத்தைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம்" என்றார்.

இச்சங்கதிகளைக் கேட்ட கிருஷ்ணராஜன் மிக்கதிகிலடைந்து பெருமூச்சு விட்டான். தோட்டத்தில் காவல் வைக்கப்பட் டிருக்கும் சங்கதி யவனுக்குத் தெரியாது. ஒரு சமயம் கணபதிப்பிள்ளையே பெட்டியை யெடுத்துக் கொண்டு போக வந்திருந்து கொலை யுண்டிருந்தால்

அந்தோ எத்தகைய அநீதம் நேர்ந்திருக்கும் என்று சிந்தித்தான்.

மறுநாள் விடிந்ததும் கிருஷ்ணராஜு துரிதமாகப் புறப்பட்டு கணபதிப்பிள்ளையின் வீட்டை நோக்கிச்சென்றான். கணபதிப்பிள்ளை வீட்டிலேயே யிருந்தான். அவன் கிருஷ்ணராஜின் முகத்திலுள்ள விகாரத்தைக் கண்டதும் அவனை யேறயிறங்க உற்று நோக்கி "என்ன? பொற்பெட்டியை யளித்து விட்டாயா?" என்றான்.

கிருஷ்ணராஜு மிக்க ஆத்திரத்தோடு, "அப்பொன் பெருஞ்சனி பிடித்தது. அது கிடைத்தது முதல் எல்லாம் தொல்லைகளாகவே நேர்கின்றன. பரம உலோபியின் பொருள்கூட யாருக்கேனும் நன்மையை யுண்டாக்குமோ! ஒருபோதுமில்லை. அது எங்கிருந்தாலும் தீங்கையே விளைவிக்கும்" என்றான்.

கணபதிப்பிள்ளை :—"உன் ஆத்திரத்தை யடக்கு. நடந்த சங்கதிதானென்ன? அதை முன்னேகூறு" என்றான்.

கிருஷ்ணராஜு :—"தாங்கள் அப்பெட்டியை யெடுத்துவர யாரை யனுப்பினீர்கள். அதை முன்னே கூறும்!" என்றான்.

கணபதிப்பிள்ளை :—"நான் யாரை யனுப்புவேன்? என்னிட மிருக்கும் ஊமையும் செவிடுமாகிய சம்புவைத்தான் அனுப்பினேன்" என்றான்.

கிருஷ்ணராஜு அவன் வரவேயில்லை என்றதே, கணபதிப்பிள்ளை "அப்படியா! வேறு யார் வந்தது? யாரிடம் பெட்டியைக் கொடுத்துவிட்டாய்? என்று மிக்க கலவரத்தோடு கேட்டான்.

கிருஷ்ணராஜு :—"பெட்டியை யாரிடமும் கொடுக்கவில்லை. அது பத்திரமாகவே யென்னிடம் இருக்

கிறது. நீலன் அங்குவந்து என் சாளரத்திற்கு நேராய் நின்றான். நான் பெட்டியைக் கீழே விடும் சமயம் அவன் சுட்டுக் கொல்லப்பட்டான்'' என்று நடந்த சங்கதிகளை விவரமாகக் கூறியதோடு, முன் தினம் தாங்களிருவரும் பெட்டியைப் பற்றி பேசிய போது செடிகளின் மறைவிலிருந்து யாரோ கேட்டுக்கொண் டிருந்ததுபோல் தனக்குத் தோன்றியதைப் பற்றியும் கூறினான்.

கணபதிப் பிள்ளை "ஆ கள்ளப்பயல்! ஆயினும் அவன் எப்படி அங்கே வந்தான். நான் நேற்று உன்னைக்கண்டு பேசியபின் நாளைக்குச் செல்லும் கப்பலில் அப்பெட்டியை யனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்வதற்காக நகரத்திற்குச் சென்று அக்கப்பல் ஏஜன்டுகளிடம் பேசிவிட்டு வந்தேன். நான் வீட்டிற்கு வரும்போது நெடுநேர மாகிவிட்டது. வீட்டிற்கு வந்து போஜனம் செய்தபின் இரவு சுமார் பத்துமணிக்கு என் வேலையாளை யழைத்துச் சரியாகப் பனிரண்டு மணிக்கு சென்று பெட்டியையெடுத்து வரும்படி கட்டளை யிட்டுவிட்டு சயனித்துக் கொண்டேன். அவன் என் கட்டளையை யலட்சியம் செய்ய மாட்டான்; அதோடு அஜாக்கிரதை யாவது சோம்பலாவது அவனிடம் கிடையாது. அப்படி யிருக்க அவன் ஏன் போகவில்லை. அல்லது போய் வந்து விட்டானா? அவனைக் கேட்ட பின்பே இச்சங்கதி விளங்கும். ஆனவரையில் நான் பெட்டியை யெடுத்து வந்த தினம் உயிர் தப்பினது நற்காலமே. தோட்டத்தில் காவல் வைக்கப்பட் டிருக்கும் சங்கதி எனக்குத் தெரியாது.'' என்றான்.

வாலிபன்:—"அந்தோ எனக்கும் அது இரவுதான் தெரிந்தது. அந்தோ கொல்லப்பட்டவன் தங்கள் ஆளல்ல

வென்றும் நீலன் என்றும் தெரியுமுன் நான்பட்ட மனவேதனை சொல்ல முடியாது..." என்றதும்,

கணபதிப்பிள்ளை :—"நீ சற்று இங்குதானே இரு; நான் சென்று சம்புவைப் பார்த்து சங்கதியறிந்துகொண்டு வருகிறேன்." என்று கூறிவிட்டுச் சென்றான்.

கிருஷ்ணராஜின் மனதில் அநியாயமாக ஒரு மனிதன் கொல்லப் பட்டானே என்பதைப் பற்றியும், நடக்கப் போகும் மரணவிசாரணையில் நாம் எப்படி ஒன்றுங் கூறாமல் பேசாமலிருந்து விடுவது என்பதைப் பற்றியும் மிக்க கலக்கம் இருந்துகொண்டே யிருந்தது. அவன் பெருங் கலக்கத்தோடும் ஆவலோடும் கணபதிப் பிள்ளை யின் வரவை யெதிர்பார்த்துக்கொண் டிருந்தான்.

சம்பு என்பவன் ஊமை செவிடு என்று கூறினோ மல்லவா! இதனால் ஒருவரும் அவனிடம் விசேடமாகப் பேசுவதேயில்லை. ஆயினும் கணபதிப்பிள்ளை மட்டும் எப்படியோ சில சமிக்கைகளால் அவனுக்குத் தனது மனோபாவத்தைத் தெளிவாக அறிவிக்கவும், அவன் கருத்துகளையும் விடைகளையும் அறிந்து கொள்ளவும் நன்றாய்ப் பழகிக்கொண்டான். அவனைக் கண்டு சங்கதி யறிந்துகொண்டு கால் மணி நேரத்திற்குள் கணபதிப் பிள்ளை கிருஷ்ணராஜினிடம் திரும்பி வந்தான். கிருஷ்ண ராஜா என்ன சங்கதி என்று கேட்டான்.

கணபதிப்பிள்ளை :—சம்பு நான் கூறியவாறே பனிரண்டு மணிக்குச் சற்று முன்பு புறப்பட்டுப் பினாகபாணிப் பிள்ளையின் வீட்டை நோக்கிச் சென்றுகொண் டிருக்கையில் நீலன் எதிர்பக்கமிருந்து மிகத்துரிதமாக வந்துகொண் டிருந்தான். அவன் சம்புவைக் கண்டதும் "ஆ சம்பு! நல்லகாலமாய் நீ யெதிரிலேயே வந்து விட்டாய். நான் உனக்காகவே வருகிறேன்.

ஏனெனில், கிருஷ்ணராஜுப் பிள்ளையின் வீட்டில் இந்த இரவு விருந்து நடக்கிற படியால் இப்போது உன்னை வரவேண்டாம் என்று கூறும்படி சொல்லி யனுப்பினர். இன்னொருவேளை ஏற்பாடு செய்கிரு ராம்? என்று கூறினன்.

அதனல் சம்பு திரும்பிவந்து பேசாமல் படுத்துக் கொண்டான். அக்கள்ளப்பயல் வேண்டு மென்றே பொன்னை யபகரித்துக்கொண்டு ஓடிவிட முயன்றான். கடவுள் தக்கபடி யவனைத் தண்டித்தார். கடவுளுடைய கருணையைக் கவனி. யோக்கியனுகிய சம்பு எப்படி அவர் தயவால் காப்பாற்றப்பட் டிருக்கிறான் பார்த்தாயா?'' என்றான்.

கிருஷ்ணராஜு:—"இப்போது மரண விசாரணை நடக்கப் போகிறது. நான் யாவற்றையும் கூற வேண்டியது கடமையல்லவா? அப்படிக் கூறுவதால் பொன் பெட்டி யகப்பட்ட சங்கதி வெளிவரும். அதை யிதுகாறும் பிணகபாணிப் பிள்ளைக்குக் கூறுமலே மறைத்து வைத்திருக்கிறோம். அது வெளிவந்தால் அப்பெட்டி எப்படி யகப்பட்டது, யாரால் களவாடப் பட்டது, என்பவை முதலிய யாவும் வெளி வர வேண்டியதே. இதற்கெப்படி?'' என்றான்.

கணபதிப்பிள்ளை சற்றுநேரம் சிந்தித்துப் பார்த்த பின் கிருஷ்ணராஜை நோக்கி,

"வாலிபனே! இதில் நமது மனசாட்சிக்கு விரோத மாக நாம் ஒன்றும் செய்யவில்லை. அக்கள்ளப் பயல் அக்கிரமமாக அன்னியர் பொருளை, அப் பரிதாபமான வயோதிகனுக்கும் தாய் தந்தையற்று நிராதரவாய்க் கஷ்ட திசையிலிருக்கும் அப் பெண்ணுக்கும் ஆபத்திற் குதவவிருந்த பொருளைக் கொள்ளையடிக்க முயன்றான்.

கடவுளே பார்த்து அவனுக்குத் தக்க தண்டனை விதித்து விட்டார். இப்போது நாம் செய்யும் எக்காரியத்தாலும் அவன் உயிர் பெற்றெழப் போகிறதில்லை. நடந்தது நடந்துவிட்டது.

இப்போது அதை வெளியிடுவதால் உயிரோடிருப்பவர்களுக்கு மிக்க மனவேதனை யுண்டாவதோடு கெடுதிகளும் நேரிடக்கூடும். ஆகையால் யாவற்றையும் சிந்திக்கும்போது ஒன்றுங் கூறாமல் பேசாமலிருப்பதே மிக்க நலம் என்று என் புத்திக்குப் புலப்படுகிறது. உன் மனசாட்சிக்கு விரோதமானது எதையும் நீ செய்யவில்லையாதலால் இதற்காக அஞ்ச வேண்டுவதேயில்லை. பொன்னை யனுப்புவதற்கு இன்னொரு சமயத்தை நான் கவனித்துக்கொண் டிருப்பேன்'' என்றான்.

கிருஷ்ணராஜு அவனுக்கு மிக்க வந்தனமளித்து விட்டு விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான். இராஜசுந்தரி மிக்க கலவரத்தோடு அவன் வரவிற்கு எதிர் பார்த்துக்கொண் டிருந்தாள். அவன் கணபதிப்பிள்ளை கூறிய அபிப்பிராயத்தை யியம்பியதே அவள் மிக்க சந்தோஷ மடைந்தாள். அப்போதுதான் தன் சங்கதி வெளியில் வராதென்று அவளுக்கு மனோநிம்மதி யுண்டாயிற்று. அதோடு தன்னை ஒரு இரவு கிருஷ்ணராஜின் அறையிற் கண்டதாகக் கூறக்கூடிய மனிதன் ஒழிந்து போனது அவளுக்குச் சந்தோஷமே.

அன்று மரண விசாரணை நடந்தது. வீட்டுக்காரியஸ்தனும் வேலைக்காரனும் சாக்ஷிகூறியபடியே கள்ளனென்று நீலன் சுடப்பட்டதாகவே ருசுசெய்யப்பட்டது. அது ஒருவாறு ஒழிந்ததைப்பற்றி கிருஷ்ணராஜு நிம்மதி யடைந்தான்.

பொன் பெட்டி யனுப்பப் படாமலே யிருப்பதைப்

பற்றி கிருஷ்ணராஜுக்கு வியாகூலமாக விருப்பினும், இராஜ சுந்தரிக்கே மிக்கதிகிலாக விருந்தது. கடைசியில் அதை யனுப்ப அவளே யொருயோஜனை செய்தாள். அதாவது அப்பெட்டியின் இடைக்கு ஊறுகாய் ஜாடிகள், மிட்டாய் டப்பிகள் முதலியவைகளை வாங்கிக் கிருஷ்ண ராஜு தன் சுற்றத்தார்க்கு அனுப்பப் போவதாகத் தன் பெரிய தந்தைக்குக் கூறினள். அதன்படியே அவர் எதிரில் ஒரு பெட்டியில் யாவும் வைத்து அடக்கம் செய்து பிறகு அவருக்குத் தெரியாமல் அந்தச் சாடிகளை யெடுத்துவிட்டு பொன் பெட்டியைவைத்து அடக்கம் செய்து விட்டுப் பிஞகபாணிப் பிள்ளையின் மூலமாகவே அதை யனுப்பினள்.

ஐந்தாறு தினங்கள் கழிந்தன. கடைசியில் கலியாண நாள் வந்து விட்டது. எல்லா ஏற்பாடுகளும் சிறப்பாய்ச் செய்யப்பட் டிருக்கின்றன. அன்று பகல் மணமகன் மணமகளும், நெருங்கிய நண்பர்களும் வீட்டிற்கூடி அங்கிருந்து புறப்பட்டு கோயிலுக்குப் பன்னிரண்டு மணிக்குச் செல்வதென்றும், அங்குவரும் நண்பர்கள் முதலிய அனைவரோடும் வீட்டிற்கு வந்து வீட்டில் பெரிய விருந்து நடத்துவதென்றும் ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது.

காலை பத்து மணிக்கு மணமகனும் மணமகளும் கலியாண உடைகளும் ஆபரணங்களும் அணிந்து கொண்டார்கள். அவர்கள் சந்தோஷத்திற்கு அளவில்லை. அருகிலுள்ள ஒரு செல்வம் பொருந்திய வர்த்தகரின் புத்திரிகள் இருவர் தோழிப்பெண்களாக நியமிக்கப் பட்டார்கள். அப்பெண்களின் தந்தையும் வந்திருந்தார்.

பிஞகபாணிப் பிள்ளையின் மனமொத்த நண்பராகிய கதிரேசம் பிள்ளையும் அவர் புத்திரிகள் இருவரும் இன்

னும் வரவில்லையென்று யாவரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பினாகபாணிப் பிள்ளை ஏன் அவர்கள் இன்னும் வரவில்லை யென்றதற்குத் தோழிப்பெண்களில் ஒருத்தி "நான் கதிரேசம் பிள்ளையின் மூத்த குமாரத்தியை நேற்று மாலை கடைவீதியிற் கண்டபோது அவள் தன் தந்தையும் தன் சகோதரியும் தானும் கலியாணத்திற்கு வருவதாகக் கூறினாள்" என்றாள்.

பத்து நிமிடங்கள் கழியுமுன் கதிரேசம் பிள்ளையின் புத்திரிகள் இருவரும் வந்தார்கள். பினாகபாணிப் பிள்ளையவர்களை நோக்கி "ஆ! வந்து விட்டீர்களா! உங்கள் தந்தை யெங்கே?" என்றார்.

அக்கன்னிகைகளில் மூத்தவள்:—"எங்கள் தந்தை ஒரு அவசரவேலையாக நகரத்திற்குச் சென்றிருக்கிறார். இன்று இங்கித நாட்டின் தலைநகராகிய இந்திர புரிக்குச் செல்லும் தபால் புகைக்கப்பல் சரியாகப் பகல் பனிரண்டு மணிக்குப் புறப்படுகிறது.

அதில் அனுப்பப்பட வேண்டிய சாமான்களைப் பற்றி தமது காரியஸ்தருக்குச் சில சமாசாரங்கள் கூறி விட்டு வருவதற்காகவே எங்கள் தந்தை நகரத்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று. ஆயினும் சீக்கிரம் வந்து விடுவார்." என்றாள்.

மணி பதினொன்றாய் விட்டது. கோயிலுக்குப் புறப்படு முன் வீட்டிற்கு வருவார்களென்று எதிர்பார்க்கப் பட்டவர்க ளனைவரும் வந்து விட்டார்கள். சரியாகப் பதினொன்றே கால் மணிக்குக் கதிரேசம் பிள்ளையும் வந்து விட்டார். அவர் வண்டியைவிட் டிறங்கியதும் வண்டியிலிருந்த ஒரு கடிதக் கட்டைக் கரத்திலெடுத்துக் கொண்டு சாரதியை நோக்கி "ஆச்சு கோயிலுக்குச் செல்

லும்வேளை நெருங்குகிறது. நீ குதிரையை வண்டியினின்றும் அவிழ்க்காமலே வண்டியை நகரத்தின் பக்கமாய்த் திருப்பிவைத்துக் கொண்டிரு'' என்று கட்டளையிட்டு விட்டு உள்ளே சென்றார்.

பிநாகபாணிப் பிள்ளை தன் நண்பரைக்கண்டதே சந்தோஷத்தோடு வரவேற்று உட்காரச்செய்து "என்ன சமாசாரம்? தபால் கப்பலின் மூலமாக இங்கித நாட்டிலிருந்து என்ன சமாசாரம் வந்தது?'' என்றார்.

கதிரேசம் பிள்ளை:—"உலகில் பல விடங்களில் கலகங்கள் நடந்துகொண் டிருக்கின்றன. நமது இங்கித நாட்டுப் பத்திரிகைகளை வாசிக்க எனக்கு இன்னும் சமயம் வாய்க்கவில்லை. வண்டியில் வரும்போது ஒரு முக்கிய இந்திரபுரி தினசரியைப் பார்த்தேன். அதிலும் வர்த்தக சங்கதிகள் உள் நாட்டுச் சங்கதிகளை யின்னும் பார்க்கவில்லை. அதைப் பிரித்ததே முதலில் ஒரு சமாசாரம் கண்ணுக்குப் புலப்பட்டது. அது ஒரு கொலையைப்பற்றி?'' என்றதே அவர் புத்திரிகளில் ஒருத்தி "அப்பா இப்போது அத்தகைய சங்கதியைப்பற்றி கூறவேண்டாம். எல்லாம் சந்தோஷ சமாசாரமே பேசவேண்டும்'' என்றாள்.

அதற்குள் பிநாகபாணிப்பிள்ளை:—"அதென்ன பிரபலமான கொலையோ?'' என்றார்.

கதிரேசம்பிள்ளை:—"கொல்லப்பட்ட ஆளாவது கொன்ற ஆளாவது பிரசித்தி பெற்ற ஆளல்ல. ஆயினும் இதில் ஒரு விசேடம் இருக்கிறது. அதாவது கொல்லப்பட்டது ஒரு கிழவி. தவறான நடக்கையுள்ளவள். குற்றம் சாட்டப்பட்டவள் ஒரு கன்னிகை. சுமார்

பதினெட்டு வயதுடையவள். அவள் நாணயமான வள் என்றும் மாசற்ற நடக்கையுடையவள் என்றும் கூறப்படுகிறது. தாய்தந்தை யில்லாதவள். அவள் அத்தகைய காரியத்தைச் செய்திருக்கவே மாட்டா ளென்பது பொதுஜன அபிப்பிராயம். ஆனுல் சந் தர்ப்ப சாட்சியங்கள் அவளுக்கு விரோதமாக விருக் கின்றன. அப்பெண்ணின் யோக்கியதை விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அவள் பெயர் நல்ல பெயர். மறந்து விட்டேன். ஆனுல் கொலே செய்ததாக அப் பெண் சிறை செய்யப்பட்டது அக்டோபர் மீ 5வ மாலே..." என்ருர்.

அந்தத் தேதியைக் கேட்டதே கிருஷ்ணராஜு திடுக் கிட்டான். அவன் முகம் வாட்டமடைந்தது. மனதில் தன்னே யறியாமலே துயரம் தோன்றியது. ஏனெனில் அவன் கப்பற் சேதமடைந்ததும், ஏதோ தீங்கு சம்பவிக் கப்போகிறதென்று அவன் மனதில் திகிலுண்டானதும் அதே தேதியில்தான். அவனுக்குண்டா யிருந்த முன் அனுபவங்களால் "நாம் ஊர் போய்ச் சேர்ந்ததும் அந்த தினம் அந்த வேளேயில் நம் குடும்பத்தில் ஏதேனும் விசே ஷம் நடந்ததா என்று கேட்டறியவேண்டும்" என்று கருதிக்கொண்டு அந்தத்தேதியைத் தன் குறிப்புப் புத்த கத்தில் எழுதி வைத்துக்கொண் டிருக்கிருன்.

இதனுல் அந்தத் தேதியைக் கேட்டதும் அவன் மன தில் வியாகூலமுண்டானதோடு, கப்பல் சேதத்தைப்பற் றிய விஷயங்கள் யாவும் நினேவிற்குவந்து அவனுக்கு மனக்கலக்கம் உண்டாக்கின.

அக்குறிப்பை இராஜசுந்தரி யுணர்ந்து அவனருகிற் சென்று "ஏன் ஒருவாறு முகவாட்டமடைந்திருக்கிறீர்?"

என்று கேட்டாள். கிருஷ்ணராஜ ஒன்றுமில்லை என்று கூறிவிட்டு மேஜைமேல் வைக்கப்பட்டிருந்த பத்திரிகைகளில் ஒன்றை யெடுத்துப் பிரித்துப்பார்க்கத் தொடங்கினான். கதிரேசம்பிள்ளையும் பினாகபாணிப்பிள்ளையும் பேசிக்கொண்டே யிருந்தவர்கள் மறுபடி அக்கொலையைப் பற்றி பேசத்தொடங்கினார்கள்.

கதிரேசம்பிள்ளை:—"குற்றம் சாட்டப்பட்ட பெண் தையல் வேலை செய்கிறாளாம், அந்த வரும்படியால் வயது முதிர்ந்த தன் பாட்டனாரைப் பாதுகாத்து வருகிறாளாம்..." என்று கூறிக்கொண்டிருக்கிறார். அதே சமயம் பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்த கிருஷ்ணராஜ திடுக்கிட்டு அதில் எதையோ உற்று நோக்கினான். உடனே அவன் முகம் சவம் போல் வெளுத்துவிட்டது. தேகம் நடுங்கியது....

அச்சமயம் கதிரேசம்பிள்ளை "ஆ! இப்போது நினைவு வந்தது. கொலைக்குற்றம் சாட்டப்பட்ட பெண்ணின் பெயர் உண்ணாமுலை" என்றார்.

அதைக்கேட்டதே இராஜசுந்தரி அய்யோ கடவுளே! என்று அலறிக்கொண்டு எழுந்து கிருஷ்ணராஜின் அருகில் ஓடினாள். இதைக்கண்ட அனைவரும் திகிலும் வியப்புமடைந்து நிமிர்ந்து பார்த்தார்கள். மறுவினாடி கிருஷ்ணராஜ கோவென்றலறி யெழுந்து அப்பத்திரிகையை எறிந்து விட்டு "இல்லை யில்லை ஒருகாலுமில்லை. அவள் கொலை செய்யவேயில்லை. அவள் நிரபராதி. கடவுளறிய நிரபராதி. அதை ருசுப்படுத்தி அவளைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை" என்று கூவிக்கொண்டே பித்தம் பிடித்தவன் போல் அறையைவிட் டோடினான். கூடத்தில் பெருங்குழப்ப முண்டாய்விட்டது: இராஜ

சுந்தரி ஒரு பக்கம் கோவென்றலறி மூர்ச்சையாய் விழுந்து விட்டாள்.

வீட்டிலிருந்து வெளிச்சென்ற கிருஷ்ணராஜு வீதியில் நின்றிருந்த கதிரேசம்பிள்ளையின் வண்டியில் பாய்ந்தேறி, அச்சமயம் அதன் சாரதி எங்கோ சென்றிருந்ததால், தானே அதிவேகமாக அவ்வண்டியை யோட்டிக்கொண்டு நகரை நோக்கிச் சென்றான். கால்மணி நேரத்திற்குள் அவன் துறைமுகம் சேர்ந்து தபால் கப்பல் இருக்கும் இடத்திற்கருகில் வண்டியை நிறுத்தி இறங்கித் துரிதமாகக் கப்பலில் ஏறினன்.

அச்சமயம் கப்பலில் செல்லவேண்டிய பிரயாணிகளனைவரும் வந்து கப்பலில் சேர்ந்திருந்தார்கள். கிருஷணராஜு கையில் ஒரு மூட்டையுமின்றி ஆத்திரத்தோடு ஓடிவந்ததைக் கண்ட பிரயாணிகளனைவரும் அவனை உற்று நோக்கினர்கள். கப்பித்தான் அவனை நோக்கி "ஆச்சு கப்பல் புறப்படப் போகிறது என்ன வேலையாக வந்தீர்?" என்றான்.

கிருஷ்ணராஜு தன்னிடமிருந்த பணப்பையை யெடுத்து கப்பித்தானிடமளித்து இந்திரபுரிக்கு வர நான் செலுத்தவேண்டிய கூலியை யெடுத்துக்கொள்ளும்" என்றான். மறுநிமிடம் அங்கிருந்த ஜனங்களை விலக்கிக்கொண்டு ஒரு ஆள் துரிதமாகக் கிருஷ்ணராஜிடம் வந்து அவன் கரத்தைப்பற்றி "என்ன? போகவா வந்தாய்?" என்றான். அந்த ஆள் கணபதிப்பிள்ளையே. கிருஷ்ணராஜு மிக்க வியப்படைந்து துயரத்தோடு "அந்தோ மூடத்தனமாய்த் தங்கிவிட்டேனே" என்றதும் கணபதிப்பிள்ளை "ஆயினும் இப்போதேனும் போவது நலம். நான் பத்திரிகையில் சங்கதியைக் கண்டேன். கடவுள் காப்

பாற்றுவார். நான் கப்பித்தான் மூலமாய் உன் பாட்டனுக்குக் கடிதம் கொடுத்தனுப்ப வந்தேன். இந்தா இப்போது நீயே யிதைக்கொண்டுபோய்க் கொடு. கப்பல் புறப்படப் போகிறது. நான் இங்கிருக்கலாகாது'' என்று கூறிக்கொண்டே பராங்குசம்பிள்ளைக்கென்று மேல்விலாசம் எழுதப்பட்ட ஒரு கடிதத்தை யவனிடமளித்துவிட்டுத் துரிதமாகக் கப்பலைவிட்டுக் கரையில் இறங்கினான்.

அடுத்த நிமிடம் புகைக்கப்பல் புறப்பட்டுவிட்டது. கப்பல் துறைமுக எல்லையைக் கடக்கும்போது ஒரு குதிரை வண்டி காற்றைப்போல் அதிவேகமாக வந்து கரையில் நின்றதும், பிநாகபாணிப் பிள்ளையும் கதிரேசம் பிள்ளையும் அதினின்று குதித்திறங்கிக் கடலோரம் ஓடி வந்து பார்த்து ஆகா! என்று அலறினார்கள். பிநாகபாணிப்பிள்ளை "அய்யோ! கடவுளே! நாம் சற்று பிந்திவிட்டோமே. நான் வீட்டிற்குத் திரும்பிச்சென்று என் புத்திரிக்கு என்ன தேறுதல் கூறுவேன். அய்யோ தெய்வமே! அவள் முன்னமே மனமுடைந்து ஸ்மரணையற்று விழுந்து கிடக்கிறாளே! இதற்கென்ன செய்வேன், கடவுள் திரண்ட செல்வத்தைக் கொடுத்தும் ஒருபயனுமில்லாமற் போயிற்றே இத்தகைய பெருந்துன்பம் எனக்கு நேரிடுமென்று நான் கனவிலும் கருதவில்லையே'' என்று பிரலாபித்தார்.

கதிரேசம்பிள்ளை:—"அய்யோ என்னுடைய முட்டாள் தனமல்லவோ இதற்குக் காரணம்'' என்றார்.

கடைசியில் இருவரும் சற்று மனந்தேறித் திரும்பினார்கள்.

42-வது அத்தியாயம்.

பரிசுத்தமான காதலும் களங்கமற்ற உள்ளமும்.

நேயர்களே! உண்ணுமுலையின் விசாரணை முடிவில் ஜூரர்கள் அவள் குற்றவாளியல்லவென்று அபிப்பிராயம் கூறினார்கள் என்று கூறினேமல்லவா. அதைக்கேட்டதே அவள் மூர்ச்சையாக வீழ்ந்துவிட்டாள். நியாயாதிபதி உடனே அவளை விடுதலை செய்துவிட்டார். அங்கு வந்திருந்த சுந்தரம்மாளும் அவள் வேலைக்காரியும் அவளையொரு அறைக்கு எடுத்துச்சென்று உபசரித்தார்கள். பாரிஸ்டர் உடனே நியாயாதிபதியிடம் உண்ணுமுலையின் மோதிரத்தை யவளிடமளித்து விடும்படி உத்திரவாக வேண்டுமென்று மநு செய்துகொண்டார். நியாயாதிபதி யப்படியே யளிக்கச் செய்தார்.

ஜூரர்கள் அப்போதுதான் சொக்குப்பொடி மயக்கத்திலிருந்து தெளிந்தவர்கள்போல் ஒருவன் வாதத்தின்படித் தாங்களனைவரும் தங்கள் அபிப்பிராயங்களை மாற்றிவிட நேர்ந்ததை நினைத்து அந்த ஆளை நோக்கினார்கள். அவன் மாயமாய்ப் போய்விட்டான். ஜூரர்களில் ஒருவன் யார் அந்த பட்டூர் சிங்காரம் பிள்ளை என்பவன்? என்றான். இன்னொருவன் "ஆம் யார் அவன்? உங்களுக்கு அறிமுகமானவனென்று நான் எண்ணியிருந்தேன்" என்றான். இவ்வாறே ஒவ்வொருவரும் அவன் தனக்குத் தெரியாதென்றும் தங்களில் சிலர்க்கு அறிமுகமானவனென்று எண்ணியிருந்ததாகவுமே கூறினார்கள். கடைசியில் ஒருவனும் அவனை யாரென்றறியான்.

கடைசியில் ஜூரர்களின் தலைவன் "அடடா! பட்டூர்! பட்டூர் ஜமீன்தார் துளசிங்கம்பிள்ளை தானே

இக் குற்றவாளியின் பாட்டனருடைய வியாஜ்ஜியத்தில் பிரதிவாதி. அவருக்கு ஒரு புத்திரன் உண்டு. அவனுக விருந்தால் இது மிக்க வியப்பே. அப்படிக்கருத விட மில்லை. ஆயினும் இவன் எப்படி ஜூரர்களில் ஒருவனுக வந்தான்?" என்றான். இன்னொருவன் "கடை வீதியில் ஒரு புத்தகக் கடையில் ஒரு மாதமாகச் சிங்காரம்பிள்ளை யின் கடை என்று பலகை தொங்கவிடப்பட்டிருந்தது" என்றான்.

ஜூரர் தலைவன்:—"சரி. எப்படியாயினும் நடந்தது நடந்துவிட்டது. இனி அதைப்பற்றி நாம் பேசுவது நமது முட்டாள் தனத்தையே வெளியிடும். நாம் பேசாமலிருப்பதே மரியாதை" என்றான். அதன்மேல் ஜூரர்கள் தத்தம் மனைக்குச் சென்றார்கள்.

உண்ணமுலைக்கு ஸ்மரணை வந்ததும் சுந்தரம்மாள் அவளை யொரு வண்டியிலேற்றிக்கொண்டு சென்றாள். உண்ணமுலைக்கு இன்னும் நடந்தது கனவோ நினைவோ வென்றிருந்தது. அவ்வண்டி நேராய்ச் சுந்தரம்மாள் வீட்டிற்குச் செல்லவில்லை. அவர்கள் முதலில் சிறைச்சாலைக்குச் சென்றார்கள். முன்னாடி வயோதிகனுகிய பராங்குசம் பிள்ளைக்கு இச்சந்தோஷ சங்கதியைக் கூறவேண்டியது அவசியமல்லவோ! அச்சமயத்தில் சிறைச்சாலைச் சட்டப்படி யவர்கள் கிழவனைக் காணமுடியாது. ஆயினும் காவலர்களிடம் சங்கதியைக் கூறிவிட்டுச் சென்றார்கள். கடைசியில் அவர்கள் வீடுபோய்ச் சேர்ந்ததும் அங்கு மிக்க இரக்கமான காட்சி நேர்ந்தது.

ஜூரிகள் சபையினின்றும் வெளிப்பட்ட சிங்காரம் பிள்ளை என்பவன் நேராக கடை வீதியிலுள்ள ஒரு புத்தகக் கடைக்குச் சென்றான். அது ஒரு பெரிய புத்தக

வியாபாரியின் கடை. அதன் வெளிப்பக்கம் "பட்டூர் சிங்காரம்பிள்ளை, புத்தக வியாபாரி" என்று எழுதப்பட்ட ஒரு பலகை தொங்கிக்கொண் டிருக்கிறது. ஆனால் இப் பெயருடைய பலகை ஒரு மாதமாகத்தான் அங்கிருக் கிறது. அதற்கு முன் வேறு பெயர் இருந்தது.

சிங்காரம்பிள்ளை அங்கு சென்றதும் அங்கிருந்த ஒரு கிழவன் எழுந்து மரியாதையாக அவனுக்கு வந்தன மளித்து "தங்கள் முயற்சி ஜெயமடைந்ததா?" என்றான். சிங்காரம்பிள்ளை "கடவுள் தயவாலும் உமது ஆசீர்வாதத் தாலும் நிரபராதியாகிய கன்னிகை பயங்கரமான மரண தண்டனையிலிருந்து தப்புவிக்கப்பட்டாள். தாங்கள் செய்த இவ் வுதவிக்காக நான் அளிப்பதாகக் கூறிய தொகை இதோ! எடுத்துக்கொள்ளும்" என்று சவரன் கள் நிறைந்த ஒரு பையை யவன் எதிரில் மேஜைமேல் வைத்து "இனி நாளை முதல் தாங்கள் என் பெயரை யெடுத்துவிட்டுத் தங்கள் பெயரையே போட்டுக்கொள்ள லாம். ஒரு மாதமாகப் புத்தகக் கடைக்காரனாக விருந் தது எனக்குப் போதும். கடையை யின்னொருவனுக்கு விற்றுவிட்டு மறுபடி ஒரு மாதத்திற்குள் திரும்பிக் கடையை வாங்கிக்கொண்டதற்குத் தக்க காரணம் தாங் கள் கூறவேண்டும்" என்றான்.

கடைக்காரன்:—"பிரபுவே! ஆ! சிங்காரம்பிள்ளை யவர் களே! தங்களுக்கு இத்தகைய உதவிசெய்ய எனக் குச் சமயம் வாய்த்ததற்காக நான் மிக்க சந்தோஷ மடைகிறேன். தங்கள் நட்பிருந்தால் போதும்" என்றான்.

சிங்காரம்பிள்ளை:—"உமது உதவியை நான் ஒருபோதும் மறவேன். வந்தனம்" என்று கூறிவிட்டுச் சென் றான்.

மறுநாட் காலை உண்ணுமுலை தன் பாட்டனாரைக் காணச் சிறைச்சாலைக்குச் சென்றாள். அவர்களிருவரும் சந்தித்தபோது நேர்ந்த காட்சி காண்போர் மனதை யுருக்கிவிடத் தக்கது.

கிழவன்:—ஆ! என் கண்மணியே! எனக்கு ஆதிமுதலே நீ நிரபராதியென்று தெரியும். எப்படியும் நீ விடுதலை யடைவாய் என்று எனக்கு நம்பகமுண்டு. ஆயினும் அதன் விபரமென்ன? எனக்குக் கூறு.

உண்ணுமுலை:—பாட்டனாரே! அதைப்பற்றிச் சாவதானமாகக் கூறுகிறேன். இனி நடக்க வேண்டிய சங்கதியைப்பற்றி யிப்போது பேசுவோம். நீ மிக்க அசௌக்கியமடைந் திருந்தாயென்று சுந்தரம்மாள் கூறினாள். தான் வந்து உன்னை அப்போதைக்கப் போது பார்த்ததாகவும் கூறினாள். உண்மைதானே?

கிழவன்:—ஆம். ஆம். சுந்தரம்மாள் எனக்கு மிக்க உதவியாக விருந்தாள். எனக்கு எவ்வளவோ பண்டங்களைக் கொண்டுவந்து கொடுத்து ஆதரித்தாள். அதோடு உனக்கு உதவி செய்ததாக நீ கூறினாயே யந்தக் கன்னிகை ஞானம்பாள். அவள் பன்முறை யுதவி செய்தாள்.

உண்ணுமுலை:—ஆம் ஆம். சுந்தரம்மாள் யாவும் கூறினாள்.

கிழவன்:—இது மட்டுமல்ல. பிரதிவாரம் சனிக்கிழமை தவறாமல் இரண்டு பவுன் நோட்டு எனக்கு ஒரு கடித வுறையில் போட்டு அனுப்பப்பட்டு வந்தது. அதை யனுப்பியது யாரென்று தெரியவில்லை. ஏனெனில் மாறுபாடான எழுத்தால் இது ஒரு நண்பர் அனுப்பியது என்று எழுதி யிருந்தது.

உண்ணுமுலை:—அது யாரோ நம்மேல் பிரியமுடையவர்

கள் தன் பெயரை வெளியிடாமல் அனுப்பினுர்கள். அது இருக்கட்டும், வியாஜ்ஜியம் எப்படி யிருக்கிறது. இன்னும் தம்புசாமிப்பிள்ளையையே வக்கீலாக வைத்துக்கொண் டிருக்கிறீர்களோ?

கிழவன்:—அடுத்த விசாரணையில் எப்படியும் நமக்கு அனுகூலமான தீர்ப்பு கிடைக்குமென்று நம்பிக்கையாகக் கூறுகிருன். முன் இருந்ததை விட இப்போது அவன் அதிக நம்பிக்கையாக வாக்களிக்கிருன். நமது வக்கில் வேலாயுதம்பிள்ளைக்குப் பின் அவனே இதை நடத்தி வருகிருன். இதன் மூலங்கள் உளவுகளெல்லாம் அவனுக்குத் தான் நன்ருய்த் தெரியும். இப்போது பாரிஸ்டர் வரதப்பிள்ளை யுனக்காக மிக்க சாதுரியமாகப் பேசினுராமே. அவரை யார் ஏற்படுத்தியது? அது தெரியவில்லையே.

உண்ணுமுலை சட்டென்று அச்சம்பாஷணையை மறைத்து "தாத்தா! அதைப்பற்றி அப்புறம் பேசிக் கொள்ளலாம். இப்போது நான் கடவுள் தயவால் இந்த அக்கிரமமான குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக்கொண்டேன். இனி எனக்கு ஏராளமான வேலை கொடுக்க அனேக நண்பர்களிருக்கிருர்கள். நமது கிருஷ்ணராஜு கூட இனிச் சீக்கிரம் வந்து சேரவேண்டியதே. பிறகு நமக்கு நற்காலமே..." என்ருள்.

கிழவன்:—ஆ! அவனுக்கு அங்கு பிஞகபாணிப்பிள்ளை என்ற ஒரு உதாரி கிடைத்தது கடவுள் தயவே. இதுகாறும் இச்சங்கதிகள் அவனுக்கு எட்டிவிட் டிருக்கலாம். அவன் மனம் என்ன வேதனைப் படுகிறதோ!

அதன் பிறகு பின்னும் சற்று நேரம் இருவரும் எதிர்கால விவகாரங்களைப் பற்றி திருப்தியோடு சம்பாஷித்துக்கொண் டிருந்தபின் உண்ணுமுலை வீட்டிற்குத்

திரும்பினுள். அவள் வழியில் ஒரு பிரதானமான தினசரி பத்திரிகையை வாங்கிக்கொண்டு சென்ருள். வீட்டிற்குச் சென்ற பின் அப்பத்திரிகையில் தன் விசாரணையைப் பற்றிய சங்கதிகளை வாசித்துப்பார்த்தாள். அதில் ஜூரர்களின் பெயர்களில் சிங்காரம்பிள்ளையின் பெயர் இல்லாததைக்கண்டு சந்தோஷமடைந்தாள்.

சற்று நேரத்திற்குள் வேலைக்காரன் வந்து உண்ணுமுலையை நோக்கி, "அம்மா! யாரோ ஒருபெரிய மனிதர் உன்னைக்கண்டு பேச வந்திருக்கிருர்" என்ருன். உண்ணுமுலைக்கு அது சிங்காரம்பிள்ளையாகவேயிருக்கவேண்டுமென்று மனதிற்பட்டது. அவள் உடனே அந்த ஆள் வந்திருக்கும் வெளியறைக்குச் சென்ருள். வீட்டுக்காரியாகிய சுந்தரம்மாள் அச்சமயம் கடைவீதிக்கு ஏதோ வேலையாகச் சென்றிருந்தாள்.

அங்கு வந்திருந்தது சிங்காரம்பிள்ளையே. கொலை நடந்ததினம் உண்ணுமுலை ஞானம்பாள் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றபோது சந்தில் அவளை யொரு மனிதன் சந்தித்துப் பேசினுனென்றும், அவனுக்கு வயது நாற்பதிருக்குமென்றும், நாணயமானவனென்றும் கூறினேமல்லவா. அம்மனிதன் இச் சிங்காரம்பிள்ளை யென்பவனே. இவன் துளசிங்கம் பிரபுவின் ஏகபுத்திரன். அப்பிரபு பராங்குசம்பிள்ளை அதாவது உண்ணுமுலையின் பாட்டனுடைய விரோதி. அக்கிழவனுடைய ஆஸ்தியை யபகரித்துக்கொண்டு கஷ்டப்படுத்துபவன். அவனுடைய புத்திரன் உண்ணுமுலைக்கெப்படி சினேகமானுனென்பது மிக்க வியப்பாகவே தோன்றும்; அதிலும் அவன் அவளுக்கு நன்மை செய்ய முன் வந்தது பின்னும் வியப்பே. ஆனல் இப்போது அவர்களுக்குள் நடக்கும் சம்பாஷணையால் அவர்கள் எப்படி நண்பரானுர்களென்

பதும் அவர்கள் நட்பு பரிசுத்தமான தென்பதும் நன்கு விளங்கும்.

கனம் சிங்காரம்பிள்ளை உண்ணுமுலையைக் கண்டதும் "கடவுள் தயவால் நீ அநீதமாகத் தண்டனை யடையாமல் தப்பியதற்காக நான் எவ்வளவோ சந்தோஷமடைகிறேன். இடையில் நீ மிக்க மனோவேதனையை யனுபவித்தாய்" என்றான்.

உண்ணுமுலை:—"ஆ! அது தாங்கள் செய்த உபகாரமே. எனக்காகத் தாங்கள் எடுத்துக்கொண்ட சிரமம் மிக்க அதிகம். அது மட்டுமல்ல; என் பாட்டனுருக்கும் பேருதவி செய்திருக்கிறீர்கள். வாரம் வாரம் சனிக்கிழமை தவறுமல் இரண்டு பவுன் அவருக்கு அனுப்பி வந்திருக்கிறீர்கள் என்று தெரிந்து கொண்டேன்" என்றாள்.

சிங்காரம்பிள்ளை:—ஆ! உன் பாட்டனுர் நான் அனுப்பியதென்று சந்தேகிக்கவில்லையே?

உண்ணுமுலை:—இல்லை யில்லை. அவருக்குத் தெரியாது. தாங்கள் எனக்குதவி செய்த சங்கதி தங்கள் தந்தைக்கு எங்கே தெரிந்து விடுமோவென்று நான் பெருந்திகிலடைந்து பத்திரிகையைப் பார்த்தேன்.

சிங்காரம்பிள்ளை:—பத்திரிகையில் ஜூரிகள் பெயர்களில் என் பெயரில்லை.

உண்ணுமுலை:—அந்தோ இச்சங்கதி தங்கள் தந்தைக்குத் தெரிந்தால் தங்களை யடியோடு வெறுத்து விடுவார். அவர் ஆஸ்தியை யுங்களுக்கு வைக்கவேமாட்டார். ஆகையால் எனக்காகத் தாங்கள் செய்த உபகாரம் அபாரமானது.

சிங்காரம்பிள்ளை:—அதைப்பற்றி யொன்றும் கூறவேண்டாம். நான் ஒரு விஷயத்தைப் பற்றி யுன்னைக்

கேட்டறிய விரும்புகிறேன். ஆயினும் உன் நிரபராதத் தன்மையை ருசுப்படுத்தத்தக்க சங்கதிகளை வெளியிட வேண்டாமென்று நீ பாரிஸ்டருக்குக் கூறியதன் காரணமட்டும் எனக்கொருவாறு தெரிகிறது.

உண்ணுமுலை:—பாரிஸ்டர் வரதப்பிள்ளையிடம் யாவும் விபரமாகக் கூறினேனே, அவர் தங்களுக்குக் கூறவில்லையா?

சிங்காரம்பிள்ளை:—இல்லை, அவர் உனக்கு வாக்குக் கொடுத்தபடி என்னிடம் கூட விவரமொன்றும் கூறவில்லை. ஒரு சமயம் என்னிடம் கூற உனக்கு விருப்பமில்லாத இரகசியம் ஏதேனும் மிருக்குமோ?

உண்ணுமுலை:—இல்லை யில்லை. அவரிடம் கூறியதை விட உம்மிடம் யாவும் தாராளமாகக் கூறுவேன்.

சிங்காரம்பிள்ளை:—அந்த மோதிரத்தைப் பற்றிய விவரந்தான் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அது எக்காரணத்தால் அவளிடம் சிக்கியதென்பதைப் பற்றி மட்டும் நான் உணரக்கூடுமென்று நினைக்கிறேன்.

உண்ணுமுலை:—நான் முதல் முதல் தங்களை என்ன சந்தர்ப்பத்தோடு சந்தித்தேன் என்பது நினைப்பிருக்கிறதல்லவா?

சிங்காரம்பிள்ளை:—அதிருக்கட்டும். இம்மோதிரத்தைப் பற்றிய விபரமே எனக்குத் தெரியவில்லை.

உண்ணுமுலை:—இரண்டு வருடங்களுக்கு முன் என் தாயாரும் இறந்து போயிருந்ததால் என்னிடமிருந்த பணம் கொஞ்சம் கொஞ்சமாகச் செலவழிந்து போயிற்று. நான் என் ஆகாரத்திற்கு எவ்வளவோ சிக்கனமாகச் செலவுசெய்து வந்தேன். என் பாட்டனுருக்கு நான் ஆகாரமும் இன்னும் வேண்டிய சௌகரியங்களும் அளிக்கவேண்டும். என் நகைகள்

சாமான்கள் யாவும் விற்கப்பட்டன. எங்கு சென்றும் வேலை யகப்படுவது கஷ்டமாய்விட்டது. ஒரு சமயம் வேலை யகப்பட்டாலும் போதுமான கூலி கிடைப்பதில்லை. இவ்வாறிருக்கையில் ஒருநாள் நான் என் பாட்டனருக்குச் சிற்றுண்டி யெடுத்துக் கொண்டு சிறைச்சாலைக்குச் சென்றிருந்தேன். அந்த விடத்தில் அந்தச் சின்னம்மாள் என்ற கிழவி யாரையோ காணவந்தவள் என்னைப் பார்த்தாள். அப்போது தான் நான் முதல் முதல் அவளைக் கண்டேன்.

பிறகு அவள் இரண்டொரு முறை வழியில் என்னைக் கண்டு பேசினள். "நீ என் இப்படிக் கஷ்டப்பட வேண்டும். மனம் வைத்தால் நல்ல க்ஷேமநிலைமை யடையலாமே. இஷ்டமான ஆடை யாபரணங்கள் கிடைக்கும். வேலைக்காரர் எல்லா வேலைகளையும் செய்யக் காத்துக் கொண் டிருப்பார்கள். வண்டியில் சவாரி செய்யலாம்" என்று பலவித ஆசை வார்த்தைகளைக் கூறினள்.

நான் அவள் வார்த்தைகளை முதலில் கவனிக்கவில்லை. பிறகு அவள் எப்படியோ நான் சிறைச்சாலைக்குச் சென்று திரும்பிவரும்போ தெல்லாம் என்னைச் சந்திக்கத் தொடங்கினள். வரவரத் தாராளமாய்த் தன் துஷ்ட எண்ணத்தை வெளிப்படையாகக் கூறவும் தொடங்கினள்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் என் கையிலிருந்த கடைசிகாசும் செலவழிந்து விட்டது. ஆகாரத்திற்கு ஒரு வழியுமில்லை. என் தாயாரின் மோதிரம் ஒன்று இருக்கிறது. அதை யென் தாயின் ஞாபகார்த்தமாக வைத்துக்கொண் டிருக்கிறேன். அதை விற்க எனக்கு மனம் வரவில்லை. ஆயினும் என் செய்வது? என் பாட்ட

ளுருக்கு ஆகாரம் கொண்டுபோக வேண்டும். கடைசியில் என் மனோவேதனையை யெவ்வளவோ அடக்கிக்கொண்டு மோதிரத்தை யெடுத்துக்கொண்டு கடைக்குச் சென்று ஒரு வர்த்தகனிடம் காட்டினேன். அவன் "நீ யாரோ எனக்குத் தெரியாது. இந்த மோதிரம் உன்னுடையதென்று நற்சாட்சி பத்திரம் கொண்டுவா" என்று கூறிவிட்டான். அவ்வாறே இரண்டு மூன்றிடங்களில் கூறிவிட்டார்கள். என்ன செய்வேன். எனக்குண்டான துயரத்திற்களவில்லை. என் மனதில் பெரிய கலவரமுண்டாகி விட்டது. அச்சமயம் சனிபோல் அக்கிழவி எதிரில் வந்தாள். என் வியாகூலத்தை யவளிடம் கூறினேன்.

அவள் தான் விற்றுக் கொடுப்பதாகக் கூறி அதை வாங்கிக்கொண்டு போனுள். என்னை ஒருமணி நேரம் அங்கு காத்திருக்கும்படி கூறினுள். நான் அவ்வாறே காத்துக்கொண் டிருந்தேன். கடைசியில் அவள் வந்து தான் ஏதோ மிக்க பிரயாசைப் பட்டதாகவும் மோதிரத்தை யொருவரிடம் கொடுத்துவிட்டு வந்ததாகவும் அது விலைப்பட இரண்டொரு நாட்கள் செல்லுமென்றும் கூறி விட்டாள். எனக்குண்டான வியாகூலம் கடவுளுக்கே தெரியும். என் மனம் பித்தம் கொண்டதுபோலாய் விட்டது. அச்சமயம் அக்கிழவி என்னென்னமோ கூறிக்கொண்டே யென்னைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்ருள். அப்போதிருந்த மனோ நிலைமையில் அவள் கூறுவது இன்னதென்றும் எனக்குத் தோன்றவில்லை. அவள் எங்கு அழைத்துச் செல்கிருளென்பது எனக்குத் தெரியாது. கனவில் நடப்பதுபோல் அவள் கூடச்சென்றேன்.

அவள் தன் வீட்டிற்கு என்னை யழைத்துக்கொண்டு போனபோது அங்கு உம்மைக் கண்டதும் என் புத்தி

சுயாதீனத்திற்கு வந்து விட்டது. என் நிலைமை யெனக்குத் தெரிந்தது. உடனே என் சங்கதியைக் கூறியதே தாங்கள் என் கற்பைக் காப்பாற்றுவதாகவும் ஆனால் தங்களைச் சகோதரன் போன்ற நண்பனாக ஏற்றுக்கொள்ளும்படிக்கும், தங்கள் உதவியை யங்கீகரிக்கும் படிக்கும் என்னை வேண்டிக் கொண்டீர்கள். அத்தகைய கௌரவமான உதவியை நான் எப்படி மறுப்பது? மறுத்தால் நன்றி கெட்டச் செய்கையாகும்.

தாங்கள் எனக்கு நண்பராகத் திரும்பி விட்டதை யறிந்த அக்கிழவி, "என்னால் தானே அவர் உனக்குச் சினேகமானார். அதற்கு எனக்குப் பரிசுகொடுக்க வேண்டும். என்னிடம் கொடுத்த மோதிரத்தை நானே யெடுத்துக்கொள்கிறேன்" என்றாள். என்னாலான வரையில் அவளை வேண்டிக்கொண்டேன். இதற்குடன் படாமல் என்னைப் பலவிதமாகப் பயமுறுத்தினாள். அதனால் நான் பேசாம லிருந்துவிட்டேன்.

இப்போது இரண்டு வருடங்கள் கடந்து போயின. இடையில் அதைப்பற்றி நினைவுவரும்போ தெல்லாம், தாங்கள் செய்து வரும் பேருதவிகளை நினைத்து, தங்கள் நட்புகிடைத்தது அவள் மூலமாயல்லவா! அவள் கெட்ட எண்ணத்தோடு அதைச் செய்தாலும் நமக்கு அதனால் நன்மையே யுண்டாயிற்றன்றோ வென்று கருதித் தேறுதலடைவேன். இப்படி யிருக்க அன்று அச்சந்தில் அவளைக் கண்டபோது அவள் கரத்தில் அம்மோதிர மிருக்கக் கண்டேன். கற்பரசியும் மகா உத்தமியுமாகிய என் தாயார் அணிந்திருந்த மோதிரத்தை அசேதகமான அவ்வயோக்கியமாது அணிந்திருப்பதைக்காண என் மனந்தாளவில்லை. அதன் மேல் அதைப் பணத்திற்குப் பதிலாகக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டேன். அச்

சமயம் ஞானம்பாள் அம்மாள் எனக்குக்கொடுத்த கூலிப் பணம் என்னிட மிருந்தது. அது எனக்கு ஒருவாரச் செலவிற்குப் போதுமானது. அதை யப்படியே யாயினும் கொடுத்து விட்டு மறுபடி கூலி சம்பாதிக்கும் வரை எனது உடைகளில் சிலவற்றையேனும் விற்று விடுவதென்று தீர்மானித்தேன். அவ்வாறே கையிலிருந்த பணம் முழுமையும் கொடுத்துவிட்டு மோதிரத்தை வாங்கிக்கொண்டு சென்றேன். இதுவே மோதிரத்தைப் பற்றிய சரித்திரம். பாரிஸ்டர் இந்த ஒருவாரக் கூலியைக் கொடுத்து அதை வாங்கிய சங்கதியைக் குறிப்பாகக் கூறிவிட்டார்" என்றாள்.

சிங்காரம் பிள்ளை:—அது அவர் மேல் குற்றமாகாது. உன்னைக் காப்பாற்ற அவ்வாறு சம்பவிக்கக் கூடிய உத்தேசங்களை யவரே ஊகித்துக்கொண்டு கூறுவார். உண்மையிலேயே அத்தகைய விஷயம் நடந்திருக்கும் போது அதை யுத்தேசமாகவாவது அவர் கூறாமல் எவ்வாறு சும்மாயிருப்பார். நீ இச்சரித்திரம் முழுவதையுமே என் அடியோடு மறைக்கக் கருதினாய்?

உண்ணாமுலை:—என் எண்ணினேனா? கூறுகிறேன். ஒரு விஷயத்தைக் கூறினால் ஒவ்வொன்றாக யாவுமே வெளியிட வேண்டியதாக நேரிடும். எனக்கும் அக்கிழவிக்கும் அறிமுகமுண்டா யிருந்தது வெளிவரும் போது அவள் என்னை யொருபெரிய மனிதனிடமழைத்துச் சென்றாள் என்பதைக் கேட்டதே, அம்மனிதன் என் கற்பின் உறுதிக்குமெச்சி என்னைச் சகோதரியாகப் பாவித்தானென்றும், நான் கற்பையிழக்காமல் வந்து விட்டேனென்றும் யாரேனும் நம்புவார்களோ? அவ்வாறு சந்தேகத்திற்குள்ளாவ

தோடு என் பிராணனையே விட்டுவிடுவேன். தங்களைக்கொண்டு உண்மையை நிரூபிக்கலாமெனின் என் பாட்டனுர் தாம் இதுகாறும் ஜீவித்தது தன் விரோதியின் புத்திரன் அனுப்பிய பணத்தால் என்றறிந்தால், மனம் முறிந்து என்னைச்சபித்துத் தற்கொலை புரிந்துகொள்வார். தங்கள் தந்தை தாங்கள் எனக்குதவி புரிந்ததை யறிந்தாலோ தங்களுக்குப் பெருங்கஷ்டம் நேரிடும். எவ்வளவோ கருணையோடு என் கற்பைக் காப்பாற்றிப் பிறகு என் உயிரையும் காப்பாற்ற வந்திருக்கும் தங்களுக்கு அத்தகைய ஆபத்தை யுண்டாக்குவதை விட என் பிராணனை யிழப்பதே நலம் எனத் துணிந்துவிட்டேன்'' என்றுள்.

அம்மொழிகளைக் கேட்ட சிங்காரம்பிள்ளை முக மலர்ச்சியடைந்து "ஆ! உண்ணுமுலை உன் குணங்கள் ஒவ்வொன்றும் புகழத்தக்கதேயாகும். நான் முதலில் ஜூரரில் ஒருவனைச் சேர்ந்து உன்னைக் காப்பாற்றுவதென்று தீர்மானித்தேன். அத்துஷ்டக் கிழவியை யார் கொன்றதோ அது கடவுளுக்கே தெரியும். காலக் கிரமத்தில் அது வெளியாகுமோ ஆகாதோ நாம் கூறமுடியாது. ஆனல் சந்தர்ப்ப சாட்சியமோ உனக்குப் பலமான விரோதியாக விருக்கிறது. ஒரு சமயம் மற்ற ஜூரர்களும் என் அபிப்பிராயத்திற்குத் திரும்பாமல் உன்னைக் குற்றவாளியென்றே தீர்மானிப்பதாக விருப்பின், எனக்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டுமென்று முன்னின்று எல்லாச் சங்கதிகளையும் வெளியிட்டு உன்னை விடுதலை செய்து விடுவதென்றே எனக்குள் தீர்மானம் செய்து கொண்டிருந்தேன்.'' என்றுன்

உண்ணுமுலை:—"நீங்கள் செய்த உதவி அளவிலடங்

காதது. அதற்குப் பிரதி யுபகாரம் செய்ய ஒருவ ராலும் முடியாது..." என்றதே,

சிங்காரம்பிள்ளை:-"இருக்கட்டும் இருக்கட்டும். இப்போது இன்னொரு விஷயம் உன்னிடம் கூறக் கருதியிருக்கிறேன். நான் பாலிய வயதில் சில நெறிதவறான வழிகளில் நடந்துகொண் டிருந்தேன் என்பது உண்மையே. ஆனால் உன்னை யன்று அக்கிழவி வீட்டில் கண்டது முதல் கற்பின் மகிமையும் பெருமையும் எத்தகையன வென்றும் கற்பரசிகளின் மன உறுதி மெச்சத்தக்கதென்றும் உணர்ந்து அன்று முதலே அவ்வழிச் செல்வதை மறந்தேவிட்டேன். உன்மேல் பரிசுத்தமான காதல்கொண் டிருக்கிறேன். அதனால் என் தந்தை எனக்கு ஆஸ்தி யளிக்க மறுத்துவிட்டாலும் சரி. அப்படிக்கின்றி கொஞ்ச காலம் வரை நமது கலியாண சங்கதியை மறைத்து வைக்கவேண்டுமென்று உனக்குப் பிரியமாயின் இப்போது இரகசியமாக மணம்புரிந்து கொள்ளலாம். உன் பிரியத்திற்கு மாறாக ஒன்றும் செய்யேன்" என்றான்.

உண்ணாமுலை:—தாங்கள் எனக்கும் என் பாட்டனாருக்கும் செய்திருக்கும் உபகாரம் அளவுகடந்தது. என் உயிரே தங்களால் காப்பற்றப்பட்டது. என் கற்பும் தங்களாற் காப்பாற்றப்பட்டது. ஆகையால் தாங்கள் இன்னும் எனக்குச் செய்யக்கருதும் பெரிய கௌரவமான ஏற்பாட்டிற்கு நான் சம்மதிக்கப் பூரணமாகக் கடமைப்பட்டவளே. மேலும் இது விஷயத்தில் தாங்கள் என்னைக் கட்டாயப் படுத்தத் தகும். ஆனால் தயவுசெய்து அவ்வாறு செய்யா திருக்க வேண்டிக்கொள்கிறேன். நான் இந்த ஏற்

பாட்டிற்குச் சம்மதிக்கலாகா தென்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன. இன்னொரு விஷயம். அதாவது என் அத்தை குமாரன் கிருஷ்ணராஜா என்பவர் சிறுவயது முதல் என்மேல் அன்புடையவர். அவர் என்மேல் காதல்கொண் டிருக்கிறாரென்று நான் நம்புகிறேன். இப்போதவர் நல்ல பதவிக்கு வரவேண்டுமென்றே ஒரு கப்பலில் ஒரு உத்தியோகஸ்தராகச் சென்றிருக்கிறார்.

சிங்காரம்பிள்ளை யாவும் கேட்டபின் முகவாட்டமடைந்தாலும் "ஓ! உண்ணுமுலை! நீ கூறும் யாவும் உன் குணங்களின் பெருந்தன்மையை யின்னும் பிரகாசிக்கச் செய்கின்றன. உனக்கு மனவருத்தத்தை யளிக்கும் செய்கை யொன்றையும் நான் செய்யேன். நீ உன் அத்தை புத்திரன் மேல் காதல்கொண் டிருப்பது சுபாவமே. நீங்கள் இருவரும் மணம்புரிந்துகொண்டு பூரணசுகத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ்வீர்களென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். நீ அவ்வாறு வாழ்வதாயின் எனக்குப் பூரண சந்தோஷமே" என்றான்.

உடனே உண்ணுமுலையின் முகத்தில் ஒருவித மாறுதல் உண்டாயிற்று. அவள் துயரத்தோடு "அந்தோ தாங்கள் கூறும் கோரிக்கை நிறைவேறாது. நான் அவ்வாறு சுகத்தையும் சந்தோஷத்தையும் அனுபவிப்பதென்னமோ முடியாத காரியம். நான் என் அத்தை புத்திரனை மணம் புரிந்து கொள்ளத் தகவே தகாது..." என்றதே,

சிங்காரம்:—"என்ன? என்ன? ஏன் இப்படிக் கூறுகிறாய்? இவ்வாறு உன் மனம் உடைந்து போகவேண்டிய காரணம் ஒன்றுமில்லையே. என்னதான் உன் கருத்து?" என்றான்.

உண்ணுமுலை:—"தங்கள் உதவியால் நான் அப்பயங்கர

மான ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டேனுயி னும், கொலை செய்தவள் என்ற பெயர் எனக்கு உண்டாகிவிட்டது. ஜனங்களில் பலருக்கும் அது சந்தேகமாகவேயிருக்கும், அத்தகைய பழி என்மே லிருக்கையில் கௌரவமுடைய ஒருவரை நான் மணம்புரிந்து பிறகு அவருக்குத் துயரமுண்டாகச் செய்யவேமாட்டேன்'' என்றாள்.

சிங்காரம்பிள்ளை:—"நீ கொண்டிருப்பது முற்றும் தவறான அபிப்பிராயம். ஜனங்களெல்லாம் உன்மேல் இரக்கம் கொண்டிருக்கிறார்களேயன்றி ஒருவரும் நீ கொலை யாளி யென்று சந்தேகங் கொள்ளவேமாட்டார்கள். உனக்கு இன்னும் அந்த விஷபத்தால் உண்டான மனக்கலக்கம் நீங்கவில்லை. சீக்கிரத்தில் அது நீங் கும். பிறகு இந்த அபிப்பிராயம் கட்டாயம் மாறி விடும். நீ எப்படியும் உன் அத்தை புத்திரனை மணம் புரிந்துகொண்டு சுகமாக வாழ்வாய்'' என்று கூறி பலவந்தத்தின்மேல் கொஞ்ச பணம் உதவி செய்து விட்டு விடைபெற்றுச் சென்றான்.

சிங்காரம் பிள்ளை சென்ற பிறகு உண்ணுமுலை சற்று நேரம் சிந்தனையிலிருந்து, வெளியில் சென்றிருந்த சுந்த ரம்மாள் திரும்பி வந்ததும் போஜனத்திற்குச் சென்றாள்.

43-வது அத்தியாயம்.

பெண்ணின் வஞ்ச தந்திரம்.

நீலாட்சி தன் பெரிய தந்தையைப் பயமுறுத்தி முப்பதினாயிரம் பவுன் அவனிடம் பெற்றுக் கொண்டாளென்று கூறினோமல்லவா. அவளும் கனம் அச் சுதனும் இந்திரபுரி வந்து சேர்ந்ததும் அவள் உண்மை

யாகவே முப்பதினுயிரம் பவுன் சீதனமாகக் கொண்டு வந்ததைக்கண்ட அச்சுதன் அவள் பிரியப்படியே நடக்கத்தொடங்கினன். நீலாட்சி தங்கள் நாட்டு ஆசாரப்படி கலியாணச் சடங்கு நடத்தவேண்டுமென்று வற்புறுத்தியதால் அச்சுதன் அவ்வாறே மணம் செய்துகொண்டான். ஆனல் கலியாணம் அடக்கமாகவே ஆடம்பரமின்றி நடந்தது. லாயர் தம்புசாமிப்பிள்ளை அவனுடைய நெருங்கிய நண்பரில் சிலர், அச்சுதன் நண்பர்கள் இவர்களுக்கு மட்டுமே அழைப்புச் சீட்டுகளனுப்பப்பட்டன.

கலியாணம் முடிந்தபின் சதிபதிகள் நகரத்தின் கீழ்ப் பாகத்தில் ஒரு அழகிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அதை நன்ருயலங்காரம் செய்து அதில் வசிக்கத்தொடங்கினர்கள்.

லாயர் தம்புசாமிப்பிள்ளைக்கு நீலாட்சியின்மேல் கோபம் இருந்தாலும் வெளிக்கு அதைக் காட்டாமல் அவளுக்கனுசரணையாகவே நடந்து வந்தான். ஏனெனில் அவள் தன் இரகசியத்தை பொருவருக்கும் வெளியிடவில்லை. ஆயினும் தன் பயங்கரமான இரகசியம் அவளிடம் சிக்கிக்கொண்டிருக்கிறது. அதுவுமன்றி அவள் பிரபுவின் மகனை மணம் புரிந்துகொண் டிருக்கிருள். இப்போது அக்குடும்பத்தாரால் ஏற்றுக்கொள்ளப்படா விட்டாலும் பிரபு இறந்தபின் அச்சுதன் அப்பட்டத்தையும் பூஸ்திதியையும் சட்டப்படி யடைந்தே தீருவான். நீலாட்சி சீமாட்டியாய் விடுவாள். பிரபு குடும்பத்தில் சம்பந்தம் ஏற்பட்டதால் தனக்கு அதிக கௌரவம் கிடைக்கும். யாவும் கருதியே நீலாட்சியிடம் சலகரணையாகவே நடந்து வந்தான்.

அச்சுதன் தந்தை தாயர் நீலாட்சியை மருமகளாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று கூறி

விட்டார்கள். அச்சங்கதியைக் கேட்ட நீலாட்சி வேறொன்றும் கூறாமல் "ஆகட்டும் பார்ப்போம்" என்றாள். திரவியநாதம் பிரபு தம்புசாமிப்பிள்ளையின் கட்சிக்காரரில் ஒருவர். அவர் நமது தேவராஜின் தாயாருக்கு கொடுக்கும் சம்பளம் அவன் மூலமாகத்தான் கொடுக்கப்படுகிறது. ஆகையால் அப்பிரபுவின் இரகசியங்களில் சில தம்புசாமிப்பிள்ளைக்குத் தெரியும்.

நீலாட்சி மணம் செய்துகொண்டு இருந்தாலும் பிரபு வமிசத்தைச் சேர்ந்தவர் அவள் வீட்டிற்கு வருவதில்லை. அச்சுதன் குடும்பத்தார் அவளைத் தங்கள் மருமகளாக ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதே அதற்குக் காரணம். நீலாட்சியைப்பற்றியேனும் அவள் குடும்பத்தைப்பற்றியேனும் யாரும் ஒரு குற்றமேனும் கூறமுடியாதெனினும் பிரபுவின் மகன் ஒரு லாயருடைய குடும்பத்தில் பெண் கொண்டது அகௌரவம் என்று கருதப்பட்டது. இதனால் நீலாட்சி அப்படிப்பட்டவர்கள் நம்மை அங்கீகரிக்கும்படி எப்படியாவது கட்டாயப் படுத்தவேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள். தன் பெரிய தந்தையிடம் அப்பிரபுவின் இரகசியம் ஏதேனும் சிக்கிக்கொண்டிருக்கிறதென்று அவளுக்குத் தெரியாது.

லாயர் தம்புசாமிப்பிள்ளை தன் பிள்ளையை மயக்கி அவனுக்கு நீலாட்சியைக் கலியாணம் செய்து வைத்தான் என்றே எண்ணிக்கொண்டார். இத்தகைய எண்ணத்தோடு அவர் இரகசியமாய்த் தம்புசாமிப் பிள்ளையிடம் வந்து கோபத்தோடு தன் கருத்தை வெளியிட்டதும் அவன் வணக்கத்தோடு தான் அப்படியொன்றும் செய்யவேயில்லையென்றும், கனம் அச்சுதனைத் தான் கண்டதேயில்லையென்றும், அவர்கள் இருவரும் ஓடிப்போனது தனக்குத் தெரியாதென்றும், அச்சுதனும் அவளும்

மணம் புரிந்துகொண்ட சங்கதியும், அவர்கள் கூடிச் சென்றதும், அச்சுதனும் அவளும் எழுதிய கடிதத்தால் தான் தெரியுமென்றும் கூறி அக்கடிதத்தை யெடுத்துக் காட்டினன்.

பிரபு அதன்மேல் ஒன்றும் கூறுவதற்கில்லை. அவன் கூறியதை நம்ப வேண்டியதாக விருந்தது. அதனலவர் "சரி. உன் வார்த்தைகளை நம்புகிறேன். உன் சம்பந்தத்தை யடியோடு விலக்கிக்கொள்ள வெண்ணியே வந்தேன். நீ இவ்வாறு கூறுவதால் ஒன்று சொல்கிறேன். நான் உன் தமையன் புத்திரியை ஒருபோதும் என் மருமகளாக ஏற்றுக்கொள்ள மாட்டேன். நீ அதைப்பற்றி என்னிடம் சிபாரிசு செய்ய முயன்றயோ அன்றே யுனக்கும் எனக்குமுள்ள சம்பந்தம் அடியோடு போய்விடும். அதைப்பற்றி பேசாம லிருப்பதாயின் நமக்குள்ள விவகார சம்பந்தம் இப்போதிருப்பது போலவே யிருக்கட்டும்" என்றார். தம்புசாமிப் பிள்ளை "பிரபுவே எனக்குத் தங்கள் தயவு என்றும் இருக்கவேண்டு மென்பதே என் மனப்பூர்வமான கோரிக்கை" என்றான். இந்த ஏற்பாட்டின் மேல் பிரபு தமது மாளிகைக்குச் சென்றார்.

நீலாட்சியும் அவள் கணவனகிய அச்சுதனும் இந்திரபுரிக்கு வந்த பிறகு அச்சுதன் தனக்குத் துரோகம்செய்த தன் வேலைக்காரனன சொக்கனை வேலையினின்றும் நீக்கிவிடவேண்டு மென்றான். நீலாட்சி அதற்குச் சம்மதித்தாளாயினும், அவனுக்குப் பின்னும் அதிகப் பரிசுகொடுத்து இரகசியமாகத் தனக்கு உதவியாளாக விருக்கும்படி வைத்துக்கொண்டாள். ஏனெனில் அவள் தன் புருடனுடைய தாய் தந்தையர் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய இரகசியமான ஒரு சூழ்ச்சி செய்துகொண் டிருக்

சென்னை-600 008
1865

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் எவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர், பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

இரத்தினபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப்பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புதுநாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ...	4	0	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	பத்மாஸனி ...	0	14
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2-பாகமும் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
சுவர்ணாம்பாள் ...	0	12	கமலசேகரன் ...	1	12
ஆனந்தலிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள்	1	12	அமராவதி 2 பாகமும்	4	0
			சகோத்ரவாஞ்சை	0	6
			லோகநாயகி	1	0

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.